




PRGI No. TNBIL/25/A1569

# வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 248 20.04.2026 திங்கள்கிழமை

Chennai Volume: 01 Issue: 248 Monday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY


### இன்றைய நாள்

திங்கள்கிழமை
(20–04–2026)
பராபவ ஆண்டு, சித்திரை–7
பிறை: வளர்பிறை
திதி
திருதியை காலை 11.12 வரைபிறகு சதுர்த்தி.
நட்சத்திரம்:
கார்த்திகை காலை 7.52 வரைபிறகு ரோகிணி.
யோகம்
மரண/அமிர்த யோகம்
ராகுகாலம்
காலை 7.30–9.00 மணி
எமகண்டம்
காலை 10.30–12.00 மணி.
சூலம் – கிழக்கு.
நல்ல நேரம் :
காலை 6–7 மணி.
மாலை 3–4 மணி.

மேஷம் ................ ஆர்வம்
ரிஷபம்................ மகிழ்ச்சி
மிதுனம் .................... நட்பு
கடகம் ..................... பாசம்
சிம்மம் ..................... பரிவு
கன்னி ................... முயற்சி
துலாம் .................. கடமை
விருச்சிகம் ............ கவனம்
தனுசு ..................... லாபம்
மகரம் .................. போட்டி
கும்பம் ..................... தனம்
மீனம் .................... நிம்மதி

# ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் மூடியது ஈரான்: இந்திய டேங்கர் கப்பல் மீது துப்பாக்கிச் சூடு

**தெஹ்ரான், ஏப்.20:**

அமெரிக்கா தனது வாக்குறுதியை மீறியதால், ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் மூடுவதாக ஈரான் அறிவித்துள்ளது.

அமெரிக்கா - ஈரான் இடையே சண்டை நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு முதல் கட்ட பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது. இந்நிலையில் இஸ்ரேல் - லெபனான் இடையே சண்டை நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டதால், ஹார் முஸ் ஜலசந்தியை திறப்பதாக ஈரான் அறிவித்தது. இதையடுத்து ஈரான் துறைமுகங்கள் மீதான கடற்படை முற்றுகை விலக்கி கொள்ளப்படும் என அமெரிக்கா வாக்குறுதி அளித்திருந்தது.




இந்நிலையில் அமெரிக்கா - ஈரான் இடையே இறுதி ஒப்பந்தம் ஏற்படும் வரை ஈரான் துறைமுகங்கள் மீதான கடற்படை முற்றுகை தொடரும் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்தார். இது ஒப்பந்த விதிமீறல் என்பதால், ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் மூடி கட்டுப்பாடுகள் விதிப்பதாக ஈரான் ராணுவம் அறிவித்தது.

இதற்கிடையில், ஹார்முஸ் ஜலசந்தி திறக்கப்பட்டதாக அறிவிப்பு வெளியானதால், 'ஜக் ஆர்னவ், சன்மர் ஹெரால்டு' ஆகிய 2 இந்திய ஆயில் டேங்கர் கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியை கடக்க முயன்றன. அப்போது ஈரான் ராணுவத்தினர் 2 படகுகளில் வந்து எச்சரிக்கை விடுக்காமல், 'ஜக் ஆர்னவ்' கப்பல் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். ஆனால் சன்மர் ஹெரால்டு கப்பல் மீது துப்பாக்கிச் சூடு நடத்தவில்லை.

இதையடுத்து இந்த 2 கப்பல்களும் ஹார்முஸ் பகுதிக்கு திரும்பி சென்றன. இதில் கப்பலுக்கும் அதில் உள்ள ஊழியர்களுக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட 'ஜக் ஆர்னவ்' என்ற இந்திய கப்பல், ஈராக்கில் இருந்து 20 லட்சம் பேரல் கச்சா எண்ணெய் ஏற்றிக் கொண்டு வந்தது.

இந்தியா அதிருப்தி: ஈரானின் 3 போர்க் கப்பல்களை, அமெரிக்க கடற்படையின் தாக்குதலில் சிக்காமல் வீரர்களுடன் இந்தியா பாதுகாத்து வருகிறது. இந்நிலையில் இந்திய ஆயில் டேங்கர் கப்பல் மீது ஈரான் ராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளது. இது தொடர்பாக இந்திய அதிகாரிகள் ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். ஹார்முஸ் ஜலசந்தியை கடக்க இந்திய ஆயில் டேங்கர் கப்பல்களுக்கு எந்த தடையும் இல்லை. எனவே, இந்த தாக்குதல் குறித்து இந்திய கடற்படையும் விசாரித்து வருகிறது. ஓமன் வளைகுடா பகுதியில் உள்ள 3 இந்திய போர்க் கப்பல்கள், இந்திய ஆயில் டேங்கர் கப்பல்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் பணியில் ஈடுபடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைந்ததும், தமிழகம் இழந்த பெருமைகள் மீட்டெடுக்கப்படும்: அமித்ஷா பிரசாரம்

**சென்னை, ஏப்.20:**

தமிழக சட்டசபை தேர்தலை முன்னிட்டு, ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி தொகுதிக்கு உட்பட்ட சிவகிரியில் மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அவர் சிவகிரி அரசு மருத்துவமனை முதல் தீரன் சின்னமலை சிலை வரை சாலை வலம் செல்கிறார். அப்போது, மொடக்குறிச்சி பா.ஜ.க. வேட்பாளரான கிருத்திகாவை ஆதரித்து பிரசாரத்தில் ஈடுபட்டார்.



அவர் மொடக்குறிச்சியில் வாக்குசேகரிப்பில் ஈடுபட்டபோது, இந்தியில் உரையாற்றினார். அவர் பேசும்போது, தமிழகத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் வெற்றி கூட்டணி அமைக்கப்பட்டு உள்ளது. தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைந்ததும், தமிழகம் இழந்த பெருமைகள் மீட்டெடுக்கப்படும் என்று கூறினார்.

அப்போது, தி.மு.க. ஆட்சியில் நடக்கும் ஊழல்கள் முடிவுக்கு வரும் என்றார். தமிழகத்தில் கருணாநிதி, அவருடைய மகன் ஸ்டாலின், அதன்பின்னர் அவருடைய மகன் என குடும்ப அரசியல் தொடர்கிறது. ஸ்டாலின், அவருடைய மகன் ஆட்சிக்கு வரவேண்டும் என பணியாற்றி கொண்டிருக்கிறார். தனது மகனை முதல்-அமைச்சராக்க வேண்டும் என்பதே ஸ்டாலினின் ஒரே குறிக்கோள்.

பெண்களுக்கு உரிமையை கொடுக்க கூடிய மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை தி.மு.க. மற்றும் காங்கிரஸ் கட்சி நிறைவேற்ற விடவில்லை. மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை அந்த கூட்டணி முறியடித்து உள்ளது என்று பேசியுள்ளார்.

தமிழக அரசின் பதவிக்காலம் மே மாதம் 10-ந்தேதியுடன் நிறைவடைகிறது. இதனை தொடர்ந்து, தமிழக சட்டசபைக்கான தேர்தல் தேதியை கடந்த மார்ச் 15-ந்தேதி தேர்தல் ஆணையம் அறிவித்தது. இதன்படி, ஏப்ரல் 23-ந்தேதி ஒரே கட்டத்தில் தேர்தல் நடத்தப்படுவதுடன், வாக்கு எண்ணிக்கை மே 4-ந்தேதி நடைபெறும் என்றும் அறிவித்தது.

இதனை தொடர்ந்து, அரசியல் கட்சிகள் தொகுதி பங்கீடு, வேட்பாளர் தேர்வு உள்ளிட்ட பணிகளை முடித்து, தீவிர பிரசார பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. தேர்தலை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன. தமிழகத்தில் 4 முனைப்போட்டி காணப்படுகிறது.

இதில் தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம் பெற்றுள்ள கட்சிகளுக்கு ஆதரவாக பிரதமர் மோடி, மத்திய மந்திரி பியூஷ் கோயல் உள்ளிட்டோர் ஏற்கனவே வாக்கு சேகரித்து சென்றுள்ளனர்.

# தூத்துக்குடியில் பஞ்சு குடோனில் பயங்கர தீவிபத்து

**தூத்துக்குடி, ஏப்.20:**

தூத்துக்குடி சிப்காட் தொழில்பேட்டை வளாக பகுதியில் தனியார் ஏற்றுமதி நிறுவனத்திற்கு சொந்தமான பஞ்சு குடோன் ஒன்று உள்ளது. இங்கு வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்காக ஏராளமான பஞ்சு மூட்டைகள் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. நேற்று பிற்பகலில், கிடங்கின் ஒரு பகுதியில் திடீரென தீப்பிடித்து எரியத் தொடங்கியது. பஞ்சு என்பதால் தீ மளமளவென கிடங்கு முழுவதும் பரவி, கரும்புகை வெறியேறியது.

இதுகுறித்து தகவல் அறிந்த மாவட்ட அலுவலர் கருணாகரன் தலைமையிலான தீயணைப்பு வீரர்கள், 3 தீயணைப்பு வாகனங்களில் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். இந்த விபத்தில் கிடங்கில் வைக்கப்பட்டிருந்த ரூ.25 கோடி மதிப்பிலான பஞ்சு மூட்டைகள் மற்றும் இதர தளவாடப் பொருட்கள் முற்றிலும் எரிந்து சேதமாகின.

# தமிழ்நாடு உளவுத்துறைக்கு புதிய ஐ.ஜி.யை நியமித்த தேர்தல் ஆணையம்

**சென்னை, ஏப்.20:**

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு 23ம் தேதி நடைபெற உள்ளது. அதற்கு முன்னதாக அரசியல் கட்சிகள் தங்களின் பிரசாரத்தில் தீவிரம் காட்டி வருகின்றன. தேர்தல் பிரசாரம் 21-ம் தேதி மாலை 5 மணியுடன் நிறைவடையும் நிலையில் பல்வேறு அரசியல் கட்சிகளுக்கு பிரசாரம் செய்வதில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதாகவும், அதிகாரிகள் ஆளும் கட்சிக்கு சாதகமாக இருப்பதாகவும் கூறி அவர்களை மாற்றம் செய்ய அ.தி.மு.க., பா.ஜ.க., த.வெ.க. உள்ளிட்ட கட்சிகள் தேர்தல் ஆணையத்திடம் தொடர் புகார்களை வழங்கி வந்தன.

இந்த சூழலில் தமிழ்நாட்டில் தலைமை செயலாளர், உள்துறை செயலாளர், டி.ஜி.பி., லஞ்ச ஒழிப்புத்துறை டி.ஜி.பி., சென்னை மாநகர ஆணையர், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள், மாவட்ட கலெக்டர்கள் உள்ளிட்ட பல அதிகாரிகளை தேர்தல் ஆணையம் மாற்றி இருந்தது.

இந்நிலையில் தமிழ்நாடு காவல்துறையில் உளவுத்துறை ஐ.ஜி. செந்தில் வேலன் மாற்றப்பட்டு ஐ.ஜி. அவிநாஷ் குமாரை நியமித்து தேர்தல் ஆணையம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேலும் அவினாஷ் குமாரின் நியமனம் உடனடியாக நடைமுறைக்கு வருவதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ள நிலையில் உளவுத்துறைக்கு புதிய ஐ.ஜி. நியமனம் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# பஞ்சு குடோனில் பயங்கர தீவிபத்து: பல கோடி மதிப்பிலான பொருட்கள் எரிந்து சேதம்

**தூத்துக்குடி, ஏப்.20:**

தூத்துக்குடி சிப்காட் தொழில்பேட்டை வளாக பகுதியில் தனியார் ஏற்றுமதி நிறுவனத்திற்கு சொந்தமான பஞ்சு குடோன் ஒன்று உள்ளது. இங்கு வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்காக ஏராளமான பஞ்சு மூட்டைகள் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. நேற்று பிற்பகலில், கிடங்கின் ஒரு பகுதியில் திடீரென தீப்பிடித்து எரியத் தொடங்கியது. பஞ்சு என்பதால் தீ மளமளவென கிடங்கு முழுவதும் பரவி, கரும்புகை வெறியேறியது.

இதுகுறித்து தகவல் அறிந்த மாவட்ட அலுவலர் கருணாகரன் தலைமையிலான தீயணைப்பு வீரர்கள், 3 தீயணைப்பு வாகனங்களில் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். தீயின் வீரியம் அதிகமாக இருந்ததால், நீண்ட நேரம் போராடித் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். அப்போது, உள்ளே ஏற்பட்ட கடும் வெப்பம் காரணமாக கிடங்கின் ஒரு பக்கச் சுவர் திடீரென இடிந்து விழுந்தது. இதனால் அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இந்த விபத்தில் கிடங்கில் வைக்கப்பட்டிருந்த ரூ.25 கோடி மதிப்பிலான பஞ்சு மூட்டைகள் மற்றும் இதர தளவாடப் பொருட்கள் முற்றிலும் எரிந்து சேதமாகின. தீ விபத்திற்கான காரணம் குறித்து சிப்காட் போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். மின் கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதா அல்லது வேறு ஏதேனும் காரணமா என்ற கோணத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது.

# இலங்கை சென்றடைந்தார் சி.பி.ராதாகிருஷ்ணன்: விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு

**கொழும்பு, ஏப்.20:**

இந்திய துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் 2 நாள் அரசு முறை பயணமாக இன்று இலங்கை சென்றுள்ளார். கொழும்பு விமான நிலையம் சென்றடைந்த அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இலங்கைக்குதான் பொறுப்பேற்ற பின்னர் முதல் தடவை அவர் சென்றுள்ளார்.

இந்த பயணத்தின்போது இலங்கை அதிபர் அனுர குமார திசநாயகே, பிரதமர் ஹரினி அமரசூரியா, நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசா ஆகியோரை சி.பி.ராதாகிருஷ்ணன் சந்தித்து பேசுகிறார். இதேபோல இலங்கையில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளை சேர்ந்த முக்கிய பிரதிநிதிகளையும் சந்தித்து பேச உள்ளார். தனது 2 நாள் பயணத்தின்போது எரிசக்தி, சமுதாய மேம்பாடு, பிராந்திய வளர்ச்சி, மீனவர் நலன் உள்பட பல்வேறு துறைகளில் முக்கிய ஒப்பந்தங்கள் இரு நாடுகளுக்கு இடையேயும் கையெழுத்தாக உள்ளதாக கூறப்படுகிறது.



இலங்கைக்கு, இந்தியாவின் துணை ஜனாதிபதி 26 ஆண்டுகளுக்கு பின்னர் இப்போதுதான் சென்றுள்ளார். இதற்கு முன்பு கடந்த 2000-ம் ஆண்டு அக்டோபர் மாதம் அப்போது துணை ஜனாதிபதியாக இருந்த கிரிஷன் காந்த், இலங்கையின் பெண் பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவின் இறுதி சடங்கில் பங்கேற்க சென்றிருந்தது குறிப்பிடத்தக்கது. பிரதமர் மோடி கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 3 நாள் பயணமாக இலங்கைக்கு சென்றார். இதன் தொடர்ச்சியாக கடந்த அக்டோபர் மாதம் 3 நாள் பயணமாக இலங்கை பிரதமர் ஹரினி அமரசூரியா இந்தியா வந்தார். இருநாடுகளுக்கும் இடையே பரஸ்பரம் நல்லுறவு நீடித்து வந்தது. இதையடுத்து கடந்த பிப்ரவரி மாதம் 17-ந்தேதி முதல் 20-ந்தேதி வரை 4 நாள் பயணமாக அனுர குமார திசநாயகே இந்தியா வந்தார் என்பது குறிப்பிடதக்கது.




## இடைக்காட்டூர் திரு இருதய ஆண்டவர் திருத்தலம் மாணவர் இல்ல விழா






**மானாமதுரை, ஏப்.20:**

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள இடைக்காட்டூர் திரு இருதய ஆண்டவர் திருத்தலத்தில் உள்ள மாணவர் இல்ல விழா டாக்டர். கிருபாகரன் அரசு தலைமையில் நடந் தது.

விற்பனை மேலாளர் அலெக்ஸாண்டர் முன்னிலை வகித்தார். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு, சான்றிதழ் வழங்கப்பட்டன. ஏற்பாடுகளை திருத்தல அதிபர் ஜான் வசந்தகுமார் மற்றும் ஆசிரியர்கள்,இல்ல காப்பாளர்கள் செய்திருந்தனர்.

## பாண்டிய ராஜ்ஜியம் வரலாற்று குழுவிற்கு திருவிதாங்கூர் சமஸ்தானம் ராணி பாராட்டு





**மதுரை, ஏப்.20:**

பாண்டிய ராஜ்ஜியம் ஸ்தாபனம் வரலாற்றுப் பயணத்தில் புதிய அத்தியாயம் பாண்டியர்களின் புகழ்மிகு வரலாற்றை மீண்டும் எழுப்பும் நோக்கில் செயல்பட்டு வரும் பாண்டியர்கள் தேடி பயணம் வரலாற்று ஆய்வு குழு, பாண்டிய ராஜ்ஜியத்தை மறுபடியும் ஸ்தாபனம் செய்யும் வரலாற்றுச் செயற்பாட்டில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. இத்திட்டத்தின் ஒரு முக்கிய நிகழ்வாக, பாண்டியர்களின் அடையாளங்களாக விளங்கும் செங்கோல், அரசு சின்னமான இரட்டை மீன் குறியீடு மற்றும் வீரவாள் ஆகியவை சிறப்பாக வடிவமைக்கப்பட்டு, பூஞ்சார் தேசத்தின் இளவரசி மற்றும் திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் ராணியான பத்மஸ்ரீ கௌரி லட்சுமி பாய் அவர்களிடம் மரியாதையுடன் வழங்கப்பட்டது.

இந்த அரச சின்னங்கள், திருவனந்தபுரம் ஸ்ரீ பத்மநாத சுவாமி திருக்கோவில் வளாகத்தில் விதிவிலக்கான பூஜைகளுடன் சமர்ப்பிக்கப்பட்டு, பின்னர் அரண்மனை மரபுப்படி பூஜை செய்யப்பட்டன. அதன் பின், ராணியார் தனது கைகளால் பாண்டியர்கள் தேடி பயணம் வரலாற்று ஆய்வு குழுவின் தலைமை ஒருங்கிணைப்பாளர் மணிகண்டன் அவர்களிடம் இச்சின்னங்களை ஒப்படைத்தார்.

இந்நிகழ்வின் போது, பாண்டிய ராஜ்ஜியத்தை மீண்டும் நிறுவும் முயற்சிக்கு ராணியார் தனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன், தாம் இந்தப் பணியில் உடனிருந்தும் ஆதரவு வழங்குவதாகவும் உறுதியளித்தார்.

மேலும், "பாண்டிய ராஜ்ஜியம் மீண்டும் எழ வேண்டும் என்பது எனது நீண்டநாள் விருப்பமாகும்" என்றும் குறிப்பிட்டார். இதனுடன், திருவிதாங்கூர், பந்தளம், பூஞ்சார் உள்ளிட்ட சமஸ்தானங்களும் இம்முயற்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்று தெரிவித்து, பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்.

மேலும், பாண்டியர்களின் வரலாறு, கல்வெட்டுகள், நாணயங்கள், கோவில் பண்பாடு மற்றும் வீரபாரம்பரியத்தை பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்கும் நோக்கில் "பாண்டிய நாடு அருங்காட்சியகம்" அமைக்கும் பணியும் இக்குழுவால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த அருங்காட்சியகம், பாண்டியர்களின் தொன்மையும் பெருமையும் உலகளவில் வெளிப்படுத்தும் மையமாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு, பாண்டியர்களின் பாரம்பரியத்தை மீட்டெடுக்க முனையும் வரலாற்றுப் பயணத்தில் ஒரு முக்கியமான படியாகக் கருதப்படுகிறது. இது தமிழக வரலாற்று உணர்வை மீண்டும் எழுப்பும் ஒரு புதிய தொடக்கமாகவும் பார்க்கப்படுகிறது.

## முதலமைச்சரை சந்தித்து திமுக கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்த கிறிஸ்தவ பேராயர்கள்



**சென்னை, ஏப்.20:**

சென்னை ஆழ்வார் பேட்டையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் சென்னையின் பல்வேறு சபைகளின் மாவட்ட கிறிஸ்தவ பேராயர்கள் சந்தித்தனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை சந்தித்த கிறிஸ்தவ பேராயர்கள் தேர்தலில் திமுக கூட்டணிக்கு முழு ஆதரவு அளித்தனர்.

தொகுதி மறுவரையறை மசோதாவை தடுத்து நிறுத்திய முதலமைச்சருக்கு கிறிஸ்தவ பேராயர்கள் பாராட்டு தெரிவித்தனர்.

கிறிஸ்தவர் என்பதற்காக மட்டும் எவரையும் ஆதரிக்க வேண்டாம். கட்சிகளின் கொள்கைகளின் அடிப்படையில் வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு கிறிஸ்தவ பேராயர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

சட்டமன்ற தேர்தலில் திமுக தலைமையிலான கூட்டணிக்கு வாக்களிக்க கோரி துண்டு பிரசுரங்களும் விநியோகம் செய்தனர்.

## தமிழகத்தில் தே.ஜ. கூட்டணிக்கு ஆதரவாக ஏப்.20, 21-ல் சந்திரபாபு நாயுடு பிரச்சாரம்



**சென்னை, ஏப்.20:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியின் வேட்பாளர்களை ஆதரித்து, ஆந்திரப் பிரதேச முதல்வர் சந்திரபாபு நாயுடு ஏப்ரல் 20 மற்றும் 21 தேதிகளில் தமிழகம் முழுவதும் இரண்டு நாள் பிரச்சாரப் பயணம் மேற்கொள்கிறார்.

தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியில் பாஜக, அதிமுக, பாமக, அமமுக உள்ளிட்ட கட்சிகள் இடம்பெற்றுள்ளன. இக்கூட்டணியின் வேட்பாளர்களை ஆதரித்து ஆந்திர முதல்வரும், தெலுங்கு தேசம் கட்சியின் தலைவருமான சந்திரபாபு நாயுடு ஏப்ரல் 20, 21ஆம் தேதிகளில் தமிழகத்தில் பிரச்சாரம் செய்கிறார்.

ஏப்ரல் 20-ல் கோவை நகரில் நடைபெறும் பிரம்மாண்டமான பொதுக்கூட்டத்தில் சந்திரபாபு நாயுடு உரையாற்றவுள்ளார். அதன்பின்னர், ஒசூர் மற்றும் தளி ஆகிய இடங்களுக்குப் பயணம் செய்து, அங்கு நடைபெறும் மற்றொரு பொதுக்கூட்டத்திலும் அவர் கலந்து கொள்கிறார். மாலையில் சென்னை வந்தடையும் அவர், ஆவடி பகுதியில் நடைபெறும் பிரம்மாண்டமான ரோடு ஷோவில் பங்கேற்கிறார்.

ஏப்ரல் 21 அன்று மதுரை செல்லும் சந்திரபாபு நாயுடு, அங்கிருந்து சாத்தூர் சென்று சமூகத் தலைவர்களைச் சந்திப்பதுடன், பிரச்சார நிகழ்ச்சியிலும் பங்கேற்கிறார். அன்று மாலையில் அவரின் இப்பிரச்சாரப் பயணம் நிறைவடைகிறது.

## கன்னியாகுமரியில் ராகுல் காந்தி பிரசாரம் பாதுகாப்பு அதிகாரிகள் ஆலோசனை



**கன்னியாகுமரி, ஏப்.20:**

தமிழகம் வரும் ராகுல் காந்தி நாங்குநேரி, ஸ்ரீவைகுண்டம், குளச்சல் சட்டமன்ற தொகுதிகளில் நாளை பிரசாரம் மேற்கொள்ள இருக்கிறார். கன்னியாகுமரியில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து அவர் பிரசாரம் மேற்கொள்கிறார்.

இந்நிலையில் ராகுல் காந்தி வருகையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள்,முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆலோசனை கூட்டம் மண்டைக்காடு தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து கூட்டம் நடைபெறும் இடம், ஹெலிகாப்டர் இறங்கும் இடங்களை பார்வையிட்டனர்.

## "தொகுதி மறுவரையறை மசோதா தோற்கடிக்கப்படவில்லை; நிறைவேற்ற முயற்சிப்போம்" - மத்திய சட்ட அமைச்சர்



**ஊட்டி,ஏப்.20:**

"தொகுதி மறுவரை யறை மசோதா தோற்கடிக்கப் படவில்லை. அது இன்னமும் நிலுவையில் உள்ளது. அதை நிறைவேற்ற ஒருமித்த கருத்தை உருவாக்க முயற்சிப்போம்" என மத்திய சட்டத்துறை அமைச்சர் அர்ஜுன்ராம் மேக்வால் தெரிவித்தார்.

நீலகிரி மாவட்ட ஊட்டியில் போட்டியிடும் பாஜக வேட்பாளர் மு.போஜராஜனுக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொள்ள மத்திய சட்டத்துறை அமைச்சர் அர்ஜுன்ராம் மேக்வால் நேற்று ஊட்டி வந்தார்.

ஊட்டியில் ஜெயின் சமூகத்தின் 'வர்சிதப் விரதம்' நிறைவு நிகழ்ச்சியில் அவர் பங்கேற்று பஜனை பாடினார்.

மேலும், அந்த சமூக மக்களிடம் வாக்குகளை சேகரித்தார். தொகுதி மறுவரையறை மசோதா நிலுவையில் உள்ளது. அதை நிறைவேற்ற ஒருமித்த கருத்தை உருவாக்க முயற்சிப்போம் என மத்திய சட்டத்துறை தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறும் போது, "எங்களது வேட்பாளர் மு.போஜராஜன் உங்களுக்குத் தெரிந்த ஒரு பிரபலமான நபர். ராஜஸ்தானி ஜெயின் சமாஜ் அமைப்பின் ஒரு நிகழ்ச்சி ஒரு ஆன்மிக நிகழ்ச்சி என்று சொல்லலாம்.

இருந்தாலும், இங்கே பாஜகவுக்கு ஆதரவாக வாக்களிக்க மக்கள் ஆர்வமாக உள்ளனர். அதாவது, ஒரு வெளிப்படையான மாற்றம் தெரிகிறது. அதை எங்களால் காண முடிகிறது. தமிழ்நாட்டில் 'இரட்டை இன்ஜின்' அரசாங்கத்தை அமைக்க மக்கள் ஆர்வமாக உள்ளனர்.

தொகுதி மறுவரையறை மசோதா தோற்கடிக்கப் படவில்லை, அதை நாங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டோம். நாங்கள் மூன்று மசோதாக்களை அறிமுகப்படுத்தினோம். ஒன்று 131-வது அரசியல் சட்டத் திருத்த மசோதா, இது பெண்களுக்கான இட ஒதுக்கீட்டிற்கானது.

பெண்கள் இட ஒதுக்கீடு மசோதா 2023-ஐ அமல்படுத்த விரும்புகிறோம். அதற்காக அரசியலமைப்பில் திருத்தம் கொண்டு வரப்பட்டது. அதுதான் முக்கியமான மசோதா. அந்த மசோதாவுடன் இரண்டு மசோதாக்கள் இணைக்கப்பட்டிருந்தன. ஒன்று தொகுதி மறுவரையறை மசோதா, மூன்றாவது யூனியன் பிரதேச மசோதா. இவை ஒன்றோடொன்று தொடர்புடையவை.

எனவே, அந்த மசோதாவின் ஒரு பகுதியான பெண்கள் இட ஒதுக்கீடு மசோதா தோற்கடிக்கப்பட்டபோது, தொகுதி மறுவரையறை மசோதா பரிசீலனைக்கு வரவில்லை. அது நிலுவையில் உள்ளது. அதற்கான ஒருமித்த கருத்தை உருவாக்க முயற்சிப்போம். இது ஒரு அரசியலமைப்பு ரீதியான ஏற்பாடு. நாங்கள் அதைச் செய்தே ஆக வேண்டும். 1950-களில் இருந்தே தொகுதி மறுவரையறை நடந்து வருகிறது.

இதற்கு மேல் நாம் எவ்வளவு காலம் காத்திருக்க முடியும்? இதனால், எந்த மாநிலமும் நஷ்டமடையாது" என்றார்.

## 'ரஜினி 173' இயக்குநர் யார்? - நீடிக்கும் குழப்பம்



**சென்னை, ஏப்.20:**

ரஜினி நடிக்கும் 173-வது படத்தின் இயக்குநர் யார் என்பதில் இன்னும் குழப்பம் நீடித்து வருகிறது. 'ரஜினி 173' படத்தினை சிபி சக்கரவர்த்தி இயக்குவார் என்று அறிவிக்கப்பட்டது. அவரும் படத்தின் கதை, திரைக் கதையினை இறுதி செய்து பணிகளைத் தொடங்கினார்.

ஆனால், முன்பு ஒப்புக் கொண்ட தெலுங்கு படத்தினை இயக்குவதற்காக வாங்கப்பட்ட தொகையினை அளிப்பதில் சிக்கல் உருவானது. இதனால் 'ரஜினி 173' படத்தினை சிபி சக்கரவர்த்தி இயக்க முடியாத சூழல் உருவாகி இருப்பதாக கூறப்படுகிறது.

தற்போது 'ரஜினி 173' படத்தினை அஸ்வத் மாரிமுத்து இயக்குவார் என திரையுலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அவரும் ஏஜிஎஸ் நிறுவனம் தயாரிப்பில் சிம்பு நடிக்கவுள்ள படத்தினை இயக்க ஒப்பந்தமாகியுள்ளார். அவரும் ஏஜிஎஸ் நிறுவனத்திடமிருந்து தடையில்லா சான்றிதழ் வாங்கினால் மட்டுமே 'ரஜினி 173' படத்தினை இயக்க முடியும்.

இதற்காக பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. இந்த குழப்பத்தினால் 'ரஜினி 173' படத்தின் படப்பிடிப்பு எப்போது என்பதே தெரியாமல் உள்ளது. இதுவரை முதற்கட்டப் பணிகளுக்கே பல லட்சங்களை செலவு செய்துவிட்டது ராஜ் கமல் நிறுவனம். இதனால் விரைவில் அனைத்து பிரச்சினைகளுக்கும் முற்றுப் புள்ளி வைத்து 'ரஜினி 173' படத்தினை தொடங்க ராஜ் கமல் நிறுவனம் முனைப்பு காட்டி வருகிறது.

## 'என்.டி.ஏ. நோக்கமும், விஜயின் நோக்கமும் ஒன்றுதான்... அதனால்...' – தவெக தொண்டர்களுக்கு கோரிக்கை வைத்த அன்புமணி!



**கடலூர், ஏப்.20:**

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் நேற்று கடலூரில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர்,

"விஜய் அரசியலுக்கு வந்து குறுகிய காலம்தான் ஆகிறது. விஜய் கட்சித் தொடங்கியதற்கு காரணமே திமுகவை அகற்ற வேண்டும் என்பதுதான். எங்களுடைய நோக்கமும் அதுதான். அதனால் விஜய் ரசிகர்களுக்கு ஒரு வேண்டுகோள், இந்த தேர்தலில் ஓரளவு வாக்குகளைப் பெறுவார். ஆனால் வெற்றிப்பெறமாட்டார்.

அதனால் உங்களுடைய வாக்குகளை வீணாக்காதீர்கள். எங்களுக்கு வாக்களியுங்கள். அப்போது உறுதியாக திமுக தோற்கும். அதிமுக தலைமையிலான கூட்டணிக்கு வாக்களித்தால் உங்கள் நோக்கம் நிறைவேறும்.

2016-ல் எனக்கு நிறைய ஆதரவு இருந்தது. ஆனால் நான் வாக்குகளைப் பெறுவேன், வெற்றிப்பெற மாட்டேன் என அதிமுகவிற்கு ஓட்டுப் போட்டார்கள். அதே சூழல்தான் இன்றும் உள்ளது. அதனால் விஜய் ரசிகர்கள் அதிமுக கூட்டணிக்கு போடுங்கள். அதன்மூலம் திமுக ஆட்சி அகற்றப்படும்." என தெரிவித்தார்.

## கொளத்தூர் விஐபி தொகுதியில் சுற்றிச் சுழலும் வேட்பாளர்கள் - களம் எப்படி?



**சென்னை, ஏப்.20:**

**அதிமுக - சந்தான கிருஷ்ணன்:**

அதிமுக வேட்பாளரான சந்தான கிருஷ்ணன், தொகுதியில் வளர்ச்சிப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப் படவில்லை என்றும், அதிமுக ஆட்சிக்கு வந்தால் அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதாகவும் கூறி வாக்கு சேகரித்தார்.

மேலும், அதிமுக ஆட்சியில் கொண்டுவரப்பட்டு தற்போது நிறுத்திவைக்கப்பட்ட திட்டங்கள் மீண்டும் செயல்படுத்தப் படும், தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டவை அனைத்தும் வழங்கப்படும் எனவும் கூறி பிரச்சாரம் செய்து வருகிறார்.

**நாம் தமிழர் கட்சி - சவுந்திர பாண்டியன்:**

நாம் தமிழர் கட்சி வேட்பாளரான சவுந்திர பாண்டியன், சீமான் பேச்சுகள் அடங்கிய தொகுப்பை ஸ்பீக்கரில் ஒலிபரப்பியபடி தொகுதி முழுவதும் வலம் வருகிறார். மது ஒழிப்பு, போதைப் பொருட்கள் தடுப்பு, மக்களுக்கு கல்வி, மருத்துவம், குடிநீர் இலவசம் போன்ற வாக்குறுதிகளை முன்வைத்து பிரச்சாரத்தை முன்னெடுக்கிறார்.

**தமிழக வெற்றிக் கழகம் - வி.எஸ்.பாபு:**

தவெக வேட்பாளரான வி.எஸ்.பாபு, தொகுதியில் நிறைவேற்றப்படாத அடிப்படை வசதிகளை முன்வைத்தும், சாலைகளில் மழைநீர் தேங்காதபடி நடவடிக்கை எடுப்பதாகவும் கூறி வாக்கு சேகரித்து வருகிறார். மேலும், விஜய் போல் உருவ ஒற்றுமை கொண்ட நபருடன் அவர் பிரச்சாரம் மேற்கொள்வது வாக்காளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. தேர்தல் நெருங்குவதால் பிரச்சாரம் அனல் பறக்கிறது. இதனால் விஐபி தொகுதியான கொளத்தூரில் வெற்றி யாருக்கு என்பதில் மிகுந்த எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

## உளவுத் துறை ஐஜி செந்தில் வேலன் அதிரடி மாற்றம்; அவினாஷ் குமார் நியமனம்



**சென்னை, ஏப்.20:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கு இன்னும் நான்கு நாட்களே உள்ள நிலையில், உளவுத் துறை ஐஜியாக பணியாற்றி வந்த செந்தில் வேலனை பணியிட மாற்றம் செய்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. அவருக்குப் பதிலாக, புதிய உளவுத் துறை ஐஜியாக அவினாஷ் குமார் ஐபிஎஸ் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், இந்த நியமனம் உடனடியாக நடைமுறைக்கு வருவதாகவும் தேர்தல் ஆணையம் தனது அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.

முன்னதாக, தமிழக தலைமைச் செயலர் முருகானந்தம் மாற்றப்பட்டு, புதிய தலைமைச் செயலராக சாய்குமார் நியமிக்கப்பட்டார். அதேபோல், லஞ்ச ஒழிப்புத் துறை டிஜிபியும் மாற்றப்பட்டார்.

மேலும், தமிழகத்தின் சட்டம் - ஒழுங்கு பொறுப்பு டிஜிபியாக இருந்த வெங்கட்ராமன் மாற்றப்பட்டு, புதிய டிஜிபியாக சந்தீப் ராய் ரத்தோர் தேர்தல் ஆணையத்தால் நியமனம் செய்யப்பட்டார்.

சென்னை காவல் ஆணையர் அருணை பணியிலிருந்து மாற்றியும் சமீபத்தில் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது. அருணுக்கு பதிலாக அபின் தினேஷ் மோடக் சென்னை காவல் ஆணையராக நியமனம் செய்யப்பட்டார்.

## 13-ம் ஆண்டு நினைவு நாள்: டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் நினைவு இல்லத்தில் மலர் அஞ்சலி



**சென்னை, ஏப்.20:**

பத்திரிகை உலகில் வியத்தகு சாதனைகள் படைத்து முத்திரை பதித்தவர் 'தினத்தந்தி' அதிபர் டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார்.

அவரது 13-ம் ஆண்டு நினைவு நாள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கடை பிடிக்கப்பட்டது.

சென்னை போயஸ் கார்டனில் உள்ள நினைவு இல்லத்தில் டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனாருக்கு 13-ம் ஆண்டு நினைவு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நேற்று காலை நடந்தது.

டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனாரின் கல்வி, பத்திரிகை, விளையாட்டு, ஆன்மீகம் மற்றும் சமூக சேவைகளைப் போற்றும் வகையில் அனைவரும் முதலில் தலை தாழ்த்தி ஒரு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தினார்கள். பின்னர் அங்குள்ள நினைவு பீடத்தில் தினத்தந்தி குழும தலைவர் சி.பாலசுப்பிரமணியன் ஆதித்தன், தினத்தந்தி குழும இயக்குனர்கள் பா.சிவந்தி ஆதித்தன், பா.ஆதவன் ஆதித்தன் மற்றும் அனிதா குமரன் ஆகியோர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.


திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை
சிறந்த முதலீட்டு வாய்ப்பு
PREMIUM PLOT SALE
Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site
VGP THIRU NAGAR, PHASE-1
• Location: (Nr Mylapore Jn)
• Direction: N/ Face
• Total Area: 2400 sft
• Price: RS.650/sft
LIMITED PLOTS AVAILABLE!
Contact Us: 9445315510 / 9283257193
VGP Developers - Your Trusted Partner


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


WANTED:
FEMALE ANCHORS
• Age 18 to 35
• Good Looking
• Work from Home
(Full-time/Part-time)
Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889


! WANTED !
Muslim Lady
Accounts Assistant
Qualification: B.Com / Tally Knowledge Required
Company: Perfume Manufacturing Company
Location: Chrompet
Contact: 99401 46318


WANTED
IMMEDIATE OPENINGS AVAILABLE!
HOUSEKEEPING STAFF
(Male & Female)
MARKETING EXECUTIVE - ELECTRICAL FIELD
(Male & Female)
ELECTRICIAN & HELPERS
(Weekly / Monthly Wages)
ELECTRICAL SUB-CONTRACTOR
DRIVER
GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING
CONTACT NOW: 9363133253
HURRY! LIMITED VACANCIES AVAILABLE!


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com


உ
முருகன் துணை
A.S.R
ரியல் எஸ்டேட்
காஞ்சிபுரம்
சுலப தவணை உள்ள வீட்டு மனைகள்
வாங்க, விற்க மற்றும் பட்டா மாறுதல்
பெயர் மாற்றம் செய்து தரப்படும்.
காஞ்சிபுரம், செய்யாறு உள்ள வீட்டு மனைகள்
மற்றும் உள்ள அனைத்து மாவட்டகளிலும்
அணுகவும்
7305025591, 9578622711


GREEN HOUSING & PROPERTIES
மண்ணும் பொன்னும்
சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI
OFFER PRICE
ரூபாய்
₹ 1.80
லட்சம்
800 SQFT
FREE FREE!!!
10
கிராம் GOLD COIN
சேமியுங்கள்
VILLA PLOTS FOR SALE
BOOK NOW
+91 77083 95118


அகிலாண்டேஸ்வரி நகரில்
வீட்டு மனைகள் உள்ளது
மனை அளவு
= 30x40 = 1200 ச.அடி
மனை விலை
1,20,000/- மட்டும்
Cell :7305025591
இடம் : பத்தமடை உள்ளது
திருநெல்வேலி மாவட்டம்
LOCATION


குன்னத்தோழும்
உடனடி வேலைவாய்ப்பு
WANTED
டெல்டா டைமண்ட் டூல்ஸ்
சென்னை - குன்றத்தூர்
உதவியாளர் (HELPER)
அடிப்படை அறிவு, உடல் தகுதி, அனுபவம் தேவையில்லை
டர்னர் (TURNER)
டர்னர் தொழில்முறை அனுபவம் தேவை, வரைபடங்கள் படித்தல்
தகுதி: 10வது / ITI (FITTER/TURNER)
வயது வரம்பு: 18-35
சம்பளம்: நல்ல ஊதியம் + கூடுதல் நன்மைகள்
தெளிவுக்கு வரவும்
தொடர்புக்கு / For Details:
ph: 9841738379


WANTED
ஆட்கள் தேவை
சமையல்
வீட்டுவேலை
குழந்தை
நோயாளி
தங்கி
தங்காமல்
சென்னையில் தங்கி / தங்காமல் வேலை செய்யலாம்
தொடர்புக்கு
8148215778
8248610592
A trustworthy help service for Chennai families


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


THANIGAI
WANTED
ISO
REAL ESTATE MARKETING
PART TIME & FULL TIME
Flexible work
No Age Limit / No Investment
No Experience/No Qualification
No Risk / No Target
Simple work – just refer customers only
Office Location : Near Perambur Railway Station
K. Ramakrishnareddy / 90879 55111


அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..
www.arultharumdeivam.com


WANTED
Retd, VRS, Home Makers,
NRIs, Business Person
Contact
8248951872

## கவிதை அரங்கம்!





இதயத்தின் கடைசித்
துடிப்பு வரை, உன் பெயர்
மட்டுமே ஒலிக்கும்.

நீயே என் உலகம், நீயே
என் சொர்க்கம்.

காதல் என்பது இரு
உடல்கள் அல்ல, அது ஒரு
உயிர்.

உன் மௌனம் கூட ஒரு
மொழியானது, நான்
உன்னை நேசிக்கத்
தொடங்கிய நொடியில்.

விழி மூடினாலும்
தெரிகிறாய், நீ என் கனவு
அல்ல... என் உயிர் !

என் அனுமதி
இல்லாமலேயே என்
இதயத்திற்குள் நுழைந்த
அழகிய திருடன் நீ.

## வாழ்க்கை தத்துவம்...



எதையும் மறக்க முயற்சித்து
நிம்மதியை இழக்காதீர்கள்
அதை அதை அப்படியே
விட்டு விடுங்கள்
காலம் மாற்றிவிடும்

எதிர்ப்பார்ப்பினை விடுத்து
ஏற்றுக் கொள்ளும் பண்பை
வளர்த்துக் கொண்டால்
சுகம்தான் ஒவ்வொரு பொழுதும்

ஒவ்வொரு முறையும் அன்பை
நிருபித்துக் கொண்டே இருக்க
முயற்சி செய்யாதீர்கள் அது
தற்கொலையை விட கேவலமானது

## "பேய் வீடு".....!

சார்...சார்.. என்று ஒரு குரல் வாசலில் ஒலித்தது. வெளியே வந்து பார்த்தான் முருகேசன் .என்னங்க வேணும்? யார் வேணும் ?என்று கேள்வியை கேட்டான் முருகேசன்; வந்தவரை பார்த்து .சார்.. இந்த வீடு காலியா இருக்குதுன்னு,.. கேள்விப்பட்டேன். வாடகைக்கு வீடு வேணும், பக்கத்து வீடு பூட்டி இருக்கே, இது காலி வீடா சார் என கேட்டான். காலி வீடுதான் ஆனா அதில் பேய் இருக்குது, பரவாயில்லையா? என்றான். என்னது!! பேயா!!ஆமாம்பா.. ஆமாம். இந்த வீடு ஆறு மாசமா பூட்டி கிடக்குது. வீட்டோட ஓனர் சென்னையில் தான் இருக்காரு. ஆனால் இந்த வீட்டுக்கு யாருமே வர பயப்படுறாங்க. அதான் இங்க பேய் இருக்குல்ல. நீ போய் பக்கத்து தெருவுல வேற வீடு இருந்தா போய் பாரு. போ.. போ.. என்று விரட்டினான். தினமும் யாராவது வந்து இந்த வீட்ட பத்தி கேக்குறாங்க, இது ஒரு பெரிய தலைவலியா போச்சு ;மனுசன நிம்மதியா இருக்கவே விடமாட்டேங்குறாங்கப்பா. ச்சே!! என்று சலித்துக் கொண்டான் முருகேசன். வீடு கேட்டு வந்தவர் முணுமுணுத்தப்படியே சென்று விட்டார் .எதிரே ஒருவர் வருவதை பார்த்து அவர் இந்த வீடு பேய் வீடுன்னு சொல்றாங்களே! அது உண்மையா ?என கேட்டார் .அதற்கு எதிரே வந்தவர் நல்லவேளை என்கிட்ட கேட்ட அந்த வீட்ல ராத்திரி ஆனா பேய் நடமாடுது, கதவு சந்து வழியே புகை வருது, திடீர் திடீர்னு பாத்திரம் உருட்டும் சத்தம் கேட்குது, யாரோ நடந்து போற மாதிரி சத்தம் வேற கேக்குது அப்படின்னு ஊர்காரங்க எல்லாரும் சொல்றாங்க . ம்.. அப்படியா அண்ணே? அந்த முருகேசன் மட்டும் பக்கத்து வீட்ல, பேய் இருக்குன்னு தெரிஞ்சுக்கிட்டு எப்படி தான் பயம் இல்லாமல் வாழறானோ? தெரியல, என்று சொல்லிக்கொண்டே சென்றுவிட்டார். சற்று நேரத்தில் போலீஸ் ஜீப் ஒன்று முருகேசன் வீட்டு வாசலில் வந்து நின்றது .அதிலிருந்து இறங்கிய போலீஸ், முருகேசன்.... வெளியே வா.. என்று வாசலில் இருந்தபடியே கூப்பிட்டார் .முருகேசன் வெளியே வந்து பார்த்தான். என்ன சார்? என்ன வேணும்? உங்களுக்கும் பக்கத்து வீடு வாடகைக்கு வேண்டுமா? என்று கேட்டான் முருகேசன். நான் கேக்குறதுக்கு ஒழுங்கு மரியாதையா உண்மைய சொல்லிடு, இல்லன்னா முட்டிக்கு முட்டி தட்டி உன்ன கம்பி என்ன வைத்து விடுவேன் என்று மிரட்டினார் .ஆறு மாசத்துக்கு முன்னாடி பக்கத்து தெருவில் இருக்கும் பிள்ளையார் கோயில் உண்டியலை ஒடச்சி பணத்தை எடுத்தது நீதானே? கண்டு பிடிச்சாச்சு, உன்ன கைது பண்றேன், நட போலீஸ் ஸ்டேஷனுக்கு என்றார் போலீஸ்காரர் முத்து. முருகேசன் என்ன செய்வது என்று புரியாமல்...? போலீஸ்காரரை உற்றுப் பார்த்தான். இந்த மூஞ்சிய ஏற்கனவே பார்த்த மாதிரி இருக்கே என்று சற்று யோசித்தான். ஆஹா... நேற்று வந்தவனா நீ? காலியான பக்கத்து வீட்டை பத்தி கேட்ட ஆளு தானே இவரு? என்று நினைத்தான். ஒரு நிமிஷத்தில் பிளாஷ்பேக் ஓடியது. முதல் நாள் இந்த போலீஸ் சாதாரண உடையில் வந்து வீட்டைப் பற்றி விசாரித்தார். முருகேசன் இந்த வீட்ல பேய் இருக்குது என்றும், யாரும் இந்த வீட்டிற்கு குடிவர பயப்படுகிறார்கள் என்றும் கூறினான். 'ஆறு மாதமா பூட்டிதான் சார் இருக்கு 'என்றான் முருகேசன். போலிஸ் உடனே,.. உனக்கு பயம் இல்லையா ?என்றார். எனக்கு இது சொந்த வீடு சார் இந்த வீட்டை விட்டா வேற வீட்டுக்கு போக என்கிட்ட காசு இல்ல. நானே கூலி வேலை செய்றவன் என்றான் .சரி, சாவி கொடு என்றார். உடனே முருகேசன் சாவி என்னிடம் இல்லை சார், ஓனர் கையில் எடுத்துக்கிட்டு போயிட்டாரு என்றார். போலீசுக்கு முருகேசன் மேல சந்தேகம் வந்தது. சிறிது நேரம் யோசித்து விட்டு அந்த போலீஸ் சென்றார் .ஒரு மணி நேரம் கழித்து அந்த வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே செல்ல முயன்றார். கதவு உள்பக்கம் தாழ்ப்பாள் போடப்பட்டிருந்தது. போலீசுக்கு இன்னும் சந்தேகம் வந்துவிட்டது. பின்பக்க கதவு வழியாக செல்லலாம் என்று பார்த்தபோது அதுவும் உள்பக்கம் தாழ்ப்பாள் போடப்பட்டு இருந்தது .கதவை திறக்க முடியவில்லை. பிறகு ஒரு ஆளை வரவழைத்து பின்பக்க கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்த போது தான் அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. சமையல் அறையில் கீழே சுவரில் ஓட்டை போடப்பட்டிருந்தது. அந்த சந்து வழியே ஒருவர் குனிந்து வெளியே செல்ல முடியும் .அவற்றின் மறுபக்கம் முருகேசன் வீட்டின் சாமி ரூம் அந்தப் பக்கம் ஒரு தகரம் வைத்து ஓட்டையை மறைத்து ஒரு பெரிய சாமி படத்தை வைத்து மறைத்திருந்தார், முருகேசன். இன்னொரு மூலையில் ஒரு பள்ளம் தோண்டப்பட்டு இருந்தது .அதில் ஒரு கிழந்த பை கைப்பிடி தெரிந்தது .எடுத்துப் பார்த்தார் போலீஸ். அந்தப் பையின் உள்ளே இன்னொரு பை அதில் கொஞ்சம் சில்லறை ,அதிகமாக ரூபாய் நோட்டுகள் இருந்தது. கிட்டத்தட்ட ஒரு முப்பதாயிரம் ரூபாய்க்கு மேல் இருக்கும் . அதை எடுத்துக் கொண்டு சென்றது, முருகேசனுக்கு தெரியாது .முருகேசன் தான் பிள்ளையார் கோயில் உண்டியலில் இருந்து திருடி அந்த பணத்தை மறைத்து வைப்பதற்காக பூட்டி இருந்த வீட்டை பயன்படுத்திக் கொண்டான் .அவன் வீட்டுக்கும் பக்கத்து வீட்டுக்கும் நடுவில் ஒரே சுவர் .அதனால் சுலபமாக சுவரை இடித்து குனிந்து உள்ளே சென்று வருவதற்கு ஏற்ப ஓட்டை போட்டு அதை தெரியாமல் இருக்க ஒரு தகடு போட்டு மறைத்து வைத்தான். பணத்தை அங்கே ஒளித்து வைத்துவிட்டு கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து வந்து செலவு செய்து கொண்டிருந்தான். இதை தெரியாமல் மறைக்க அந்த வீட்டில் பேய் இருப்பதாக வதந்தியை பரப்பி விட்டான். இப்பொழுது போலீஸ் முத்து கண்டுபிடித்ததால், திக்கு முக்காடி பயந்து போனான் முருகேசன். போலீஸ் மிரட்டியதும் பயந்து உண்மையை ஒத்துக் கொண்டான். அவனை ஸ்டேஷனுக்கு அழைத்து சென்று விட்டார்கள். போலீஸ் முத்து நடந்த விபரத்தை அந்த பேய் வீட்டு ஓனருக்கு போன் மூலம் தெரிவித்தார். மறுநாள் அந்த வீட்டு ஓனர் வந்து வீட்டை சரி செய்து போலீஸ்காரருக்கு நன்றி தெரிவித்தார். அந்த வீட்டிற்கு வெள்ளை அடித்து, 'ஹோமம் 'நடத்தி பூஜை செய்தார். அதற்குப்பின் அந்த வீட்டுக்கு போலீஸ் முத்துவே வாடகைக்கு குடி வந்தார். 'பேய் வீடு' இப்போது ' போலீஸ் வீடாக' மாறியது.

**எம்.எல்.பிரபா.**
ஆதம்பாக்கம்.

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



ஆசிரியர்: "பூமியைச் சுத்தி என்ன இருக்கு?"
மாணவன்: "மண்ணு இருக்கு சார்!"

ஆசிரியர்: "ஒரே நிமிஷத்துல ஒரு கோடியை எப்படிச் செலவு பண்ணுவ?"
மாணவன்: "கண்ணாடியை உடைப்பேன் சார்!" (ஏன்னா கண்ணாடியை உடைச்சா கோடி வரும்!)



## தினம் ஒரு சமையல்



### வறுத்தரைத்த சிக்கன் கிரேவி

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| 1/2 கிலோ | - சிக்கன் |
| 100 கிராம் | - சின்ன வெங்காயம் |
| 1 | -தக்காளி |
| 2 | - பச்சைமிளகாய் |
| 1-1/2 டீஸ்பூன் | - இஞ்ணி பூண்டு விழுது |
| தேவையானஅளவு | -நல்லெண்ணைய் |
| தேவையானஅளவு | - உப்பு |
| சிறிதளவு | - மல்லிதழை |

**வறுத்து அரைக்க**

1-1/2 டீஸ்பூன் - மல்லி
2 டீஸ்பூன் - மிளகு
1 டீஸ்பூன் - சீரகம்
1 துண்டு - பட்டை
2 டீஸ்பூன் - தேங்காய் துருவல்
1 டீஸ்பூன் - மிளகாய்தூள்



**செய்முறை:**

வறுத்து அரைக்க தேவையான பொருட்களை வெறும் வாணலியில் இளந்தீயில் வறுத்து கொள்ளவும்.

மிளகாய் தூள் வறுக்க தேவையில்லை அடுப்பை அணைத்த பின்னர் வறுத்த மசாலா பொருட்களோடு சேர்க்கவும்

வாணலியல் எண்ணெய் ஊற்றி காய்ந்த பின் வெங்காயம் சேர்த்து சிவக்க வதக்கி,தக்காளி சேர்த்து வதக்கவும்.

நன்கு வதங்கிய பின்னர் இஞ்சி,பூண்டு விழுது சேர்த்து பச்சை வானை நீங்கும் வரை வதக்கி வறுத்து அரைத்த மசாலா சேர்த்து வதக்கவும்.

சிறிதளவு தண்ணீர் சேர்த்து வேகவைக்கவும்.சிக்கன் 3/4 பாகம் வெந்த பின்னர் சிறுதீயில் வைத்திருந்து,வெந்து எண்ணெய் பிரிந்த பின் இறக்கவும்.

## ஆவாரை பயன்கள்



ஆவாரை சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்துதல், சருமப் பொலிவு, உடல் சூட்டைத் தணித்தல் மற்றும் சிறுநீரக ஆரோக்கியம் உள்ளிட்ட பல மருத்துவக் குணங்களைக் கொண்ட ஒரு சிறந்த மூலிகையாகும். இதன் பூ, பட்டை, இலை, வேர் மற்றும் பிசின் அனைத்தும் மருத்துவப் பயன் கொண்டவை, இது இரத்த சர்க்கரை அளவை முறைப்படுத்த உதவுகிறது.

ஆவாரையின் முக்கிய மருத்துவப் பயன்கள்:

சர்க்கரை நோய் கட்டுப்பாடு: ஆவாரம்பூ டீ அல்லது பொடி, இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவை நிர்வகிக்கவும் கணையத்தை ஆரோக்கியமாக வைக்கவும் உதவுகிறது.

சருமப் பராமரிப்பு: ஆவாரம் பூவைப் பொடியாக்கி, பால் அல்லது தேனுடன் கலந்து முகத்தில் தடவினால், சருமத் தழும்புகள், வறட்சி நீங்கி முகம் பொலிவு பெறும்.

உடல் சூடு மற்றும் தாகம்: உடலின் அதிகப்படியான சூட்டைத் தணித்து, தாகத்தைக் குறைக்கிறது.

பெண்கள் ஆரோக்கியம்: பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் மற்றும் வெள்ளைப்படுதல் (LEUCORRHOEA) போன்ற பிரச்சனைகளுக்குச் சிறந்த தீர்வாக அமைகிறது.

உடல் வலுவூட்டி: ஆவாரை சமூலம் (வேர், பட்டை, இலை, பூ) கஷாயம் அல்லது குடிநீர், உடலை வலுப்படுத்தி நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கிறது.


கல்லீரல் ஆரோக்கியம்: கல்லீரலை நச்சுத்தன்மையிலிருந்து காத்து, செரிமானத்தைச் சீராக்குகிறது.

முடி ஆரோக்கியம்: ஆவாரம் பூவை அரைத்துத் தலைக்குக் குளித்து வந்தால் முடி உதிர்வு குறைந்து, முடி வளர்ச்சி அதிகரிக்கும்.

பயன்படுத்தும் முறைகள்:

ஆவாரம் பூ டீ: நிழலில் உலர்த்திய ஆவாரம் பூக்களைக் கொண்டு டீ போட்டுப் பருகலாம்.

## 'மிஸ்டர் எக்ஸ்' அனுபவம் மறக்க முடியாதது..! அதுல்யா ரவி உருக்கமான பதிவு வைரல்



இயக்குநர் மது ஆனந்த் இயக்கத்தில் ஆர்யா நடிப்பில் உருவான திரைப்படம் "மிஸ்டர் எக்ஸ்" கடந்த வெள்ளிக்கிழமை திரையரங்குகளில் வெளியானது. கௌதம் கார்த்திக், மஞ்சு வாரியர், அதுல்யா ரவி உள்பட பல முக்கிய நட்சத்திரங்கள் நடித்துள்ள இந்தப் படம் தற்போது கலவையான விமர்சனங்களை பெற்று வருகிறது.

20 நாடுகளின் பிரதமர்கள் கலந்துகொள்ளும் சர்வதேச மாநாட்டை சீர்குலைக்க தீவிரவாதிகள் திட்டமிடுவதும், அந்த அச்சுறுத்தலை தடுக்க ஆர்யா தலைமையிலான உளவுத்துறை படையினர் போராடுவதும் இந்தப் படத்தின் மைய கதை. தீவிரவாத குழுவின் தலைவராக கௌதம் கார்த்திக் வில்லன் வேடத்தில் அசத்தியுள்ளதாக பார்வையாளர்கள் பாராட்டுகின்றனர். இந்நிலையில், படத்தில் நடித்த அதுல்யா ரவி சமூக வலைதளத்தில் உருக்கமான பதிவொன்றை வெளியிட்டுள்ளார். படப்பிடிப்பு நேரத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்களை பகிர்ந்த அவர், "மிஸ்டர் எக்ஸ் என் திரை வாழ்க்கையில் மிகச் சிறந்த அனுபவம். இது உண்மையிலேயே ஒரு சிறப்பான படம்.


என்னை நம்பி வாய்ப்பு தந்த இயக்குநர் மது ஆனந்துக்கும், இணை நடிகர்களுக்கும் மனமார்ந்த நன்றி. இந்தப் படத்தில் ஸ்டண்ட் உள்பட புதுமையான பல விஷயங்களை முயற்சித்தேன். இந்த நினைவுகளை என் வாழ்நாள் முழுவதும் மறக்க மாட்டேன்" என்று உணர்ச்சிப்பூர்வமாக கூறியுள்ளார்.

ஆர்யா, மஞ்சு வாரியர், சரத்குமார், கௌதம் கார்த்திக், அனகா, ரைசா வில்சன், காளி வேண்டாம் உள்பட அனைவருக்கும் நன்றி தெரிவித்துள்ள அதுல்யா, ரசிகர்களிடம் படத்தை பார்த்துவிட்டு நேர்மையான விமர்சனங்களை தெரிவிக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். அதுல்யாவின் இந்த உருக்கமான பதிவு தற்போது சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது.



கல்யாணி ப்ரியதர்ஷன் விருது விழா ஒன்றில் ரெட் ஹாட் உண்டியல் ஹாட் ஆக கலந்துகொண்ட புகைப்படங்கள் வெளியாகி இணையத்தில் வைரல் ஆகி உள்ளது.

ஹாட் புகைப்படங்கள் இதோ பாருங்க.




## நகைச்சுவை நடிப்பே மிகவும் கஷ்டமான வேலை.! மனம் திறந்து பேசிய முனிஷ்காந்த்

சின்னத்திரையில் தொகுப்பாளராக பயணத்தை தொடங்கி, விஜய் டிவியில் ஒளிபரப்பான "சரவணன் மீனாட்சி" தொடரில் நடித்து பிரபலமானவர் ரியோராஜ்.

பின்னர் "நெஞ்சம் உண்டு நேர்மை உண்டு ஓடு ராஜா", "ஆண்பாவம் பொல்லாதது" உள்ளிட்ட பல திரைப்படங்களில் கதாநாயகனாக நடித்து திரையுலகில் தனக்கென ஒரு இடம் பிடித்துள்ளார்.

இந்த படத்தில், சேரன், மாலவிகா, காத்தாடி ராமஜயம், தீபா, மாகாபா உள்பட பல மூத்த நடிகர்களும் இணைந்துள்ளனர். நாங்க சூட்டிங் ஸ்பாட் போனாலே அவார்டு பங்ஷன் மாதிரி இருக்கும். அவ்வளவு ஆர்டிஸ்ட்கள் இருக்காங்க என்று சிரித்தபடியே கூறிய முனிஷ்காந்த், இந்தப் படத்தில் நடிப்பது தனக்கு மிகுந்த மகிழ்ச்சியை தருவதாக தெரிவித்தார். நகைச்சுவை நடிகனாக தொடர்ந்து நடிப்பது எப்படி என்று கேட்கப்பட்டபோது, ஒருத்தங்களை சிரிக்க வைக்கிறதுதான் மோஸ்ட்



சேலஞ்சிங் ஜாப். அது ரொம்ப கஷ்டமான வேலை. ஹீரோவும் ரொம்ப கஷ்டம்தான். ஆனா சிரிக்க வைக்கிறது வேற மாதிரியான சவால் என்று கூறினார்.

நகைச்சுவை நடிப்பில் தனக்கு கிடைத்த அங்கீகாரம் குறித்து அவர் மிகுந்த திருப்தியை வெளிப்படுத்தினார்.

இன்றைய சினிமா சூழல் குறித்தும் கருத்து தெரிவித்த அவர், சேரன் கூறிய வார்த்தைகளை மேற்கோள் காட்டி, "முன்பு மக்கள் நம்மை தேடி வந்தாங்க. இப்போ நாமே மக்களை அழைத்து வர வேண்டிய நிலை. அது ரொம்ப சிரமம்" என்று கூறி, இன்றைய காலகட்டத்தில் திரைப்படங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பது எவ்வளவு சவாலான பணி என்பதை உணர்த்தினார்.

பேப்பர்பாய்

சென்னை திங்கட்கிழமை 20.04.2026

# முருகனின் அபூர்வ தரிசனம் தரும் தமிழகத்தின் 10 வித்தியாசமான திருத்தலங்கள்

ஆலயங்களில் சில, பக்தர்களை ஆச்சரியப்பட வைக்கும் அளவுக்கு அபூர்வமான திருக்கோலங்களைக் கொண்டிருக்கின்றன.
பொதுவாக முருகன் என்றால் கையில் வேல், அருகில் வள்ளிதெய்வானை, மயில் வாகனம் என்ற திருக்கோலமே நமக்குள் தோன்றும்.
ஆனால் தமிழ்நாட்டில் உள்ள சில தலங்களில், நாம் எதிர்பார்க்காத விதமாக முருகன் பல்வேறு அரிய வடிவங்களில் காட்சி தருகிறார். அந்த ஒவ்வொரு திருத்தலமும் தனித்துவமான வரலாறுகளையும் தெய்வீக நிகழ்வுகளையும் கொண்டவை.
முருக பக்தர்கள் அவசியம் தரிசிக்க வேண்டிய அந்த 10 அபூர்வ முருகத் தலங்களை பற்றி விரிவாக அறிந்து கொள்வோம்.

### 1. கரும்பு ஏந்திய முருகன் செட்டிகுளம்

பெரம்பலூரிலிருந்து சுமார் 18 கிலோமீட்டர் தொலைவில் உள்ள மலைக்குன்றின் மீது அமைந்துள்ளது செட்டிகுளம் ஸ்ரீ தண்டாயுதபாணி திருக்கோயில்.
பொதுவாக முருகன் கையில் வேல் ஏந்தியபடி காட்சி தருவார்.
ஆனால் இத்தலத்தில் முருகன் கையில் செங்கரும்பு ஏந்தியபடி அருள்பாலிக்கிறார்.

கரும்பு இனிமையை குறிக்கும் சின்னமாக கருதப்படுகிறது. பக்தர்களின் வாழ்க்கையில் இனிமையும் செழிப்பும் ஏற்பட வேண்டும் என்பதற்காக முருகன் கரும்புடன் காட்சி தருகிறார் என்று அப்பகுதி மக்கள் நம்புகின்றனர்.

### 2. மயில் மீது வள்ளி அமரும் அரிய தரிசனம் திருமங்கலம்

திருச்சி மாவட்டம் லால்குடி அருகே உள்ள திருமங்கலம் சாமவேதீஸ்வரர் கோயில் மிகவும் வித்தியாசமான அமைப்பைக் கொண்டுள்ளது.
இங்கு கருவறையில் கல்யாண சுப்பிரமணியர் தெய்வானையுடன் நின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறார்.
ஆனால் வள்ளி மட்டும் தனித்த சன்னதியில் மயில் மீது அமர்ந்தபடி காட்சி தருகிறார்.

பொதுவாக முருகனே மயில் மீது அமர்ந்திருப்பார்.
ஆனால் இங்கு வள்ளி மயில் மீது காட்சி தருவது இந்த ஆலயத்தின் தனித்துவமாகும்.

### 3. பதினொன்று தலைகளுடன் முருகன் குண்டுக்கரை

ராமநாதபுரம் அருகே அமைந்துள்ள குண்டுக்கரை சுவாமிநாத சுவாமி கோயில் மிகவும் அபூர்வமான திருக்கோலத்திற்குப் புகழ்பெற்றது.
இங்கு முருகன் 11 தலைகளும் 22 கரங்களும் உடைய அற்புதமான வடிவத்தில் காட்சி தருகிறார்.

இந்த வடிவம் முருகனின் பரம்பொருள் சக்தியை வெளிப்படுத்தும் தெய்வீக வடிவமாக கருதப்படுகிறது.
மேலும் இத்தலத்தில் ஒரு அரிய காட்சி உள்ளது.
முருகன் குன்றின் மீது அமர்ந்து பிரணவ மந்திரத்தின் அர்த்தத்தை கூற, சிவபெருமான் நின்றபடி கேட்பது போன்ற அரிய திருக்கோலம் காணப்படுகிறது.

### 4. வாழைமர முருகன் துலுக்கன்குறிச்சி

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே உள்ள துலுக்கன்குறிச்சி வாழைமர பாலசுப்பிரமணியர் கோயில் 150 ஆண்டுகளுக்கும் மேலான பழமையானது.
இங்கு முருகன் வாழைமர முருகன் என்ற பெயரில் அருள்பாலிக்கிறார்.
இந்த ஆலயத்தின் தலவிருட்சம் வாழைமரம். அந்த மரத்துடன் இணைந்தே முருகன் காட்சி தருவது மிகவும் அபூர்வமானதாக கருதப்படுகிறது.



### 5. பூதகணங்கள் வணங்கும் முருகன் செய்யூர்

செங்கல்பட்டு மாவட்டம் கல்பாக்கம் அருகே உள்ள செய்யூர் கந்தசுவாமி கோயில் மிகவும் மர்மமான வரலாற்றைக் கொண்டது.
இங்கு 27 பூத வேதாள கணங்கள் முருகனை வணங்குகின்றன என்று நம்பப்படுகிறது.
வள்ளி மற்றும் தெய்வானை தனித்தனி சன்னதிகளில் இருப்பதும் இத்தலத்தின் ஒரு சிறப்பாகும்.

### 6. ஒரே தலத்தில் மூன்று நிலைகளில் முருகன் வடசென்னிமலை

சேலம் அருகே உள்ள வடசென்னிமலை பாலசுப்பிரமணியர் கோயில் பக்தர்களுக்கு மூன்று விதமான முருக தரிசனத்தை வழங்குகிறது.

இங்கு முருகன்
* குழந்தை வடிவில்
* தண்டாயுதபாணி என துறவற கோலத்தில்
* வள்ளிதெய்வானையுடன் குடும்ப கோலத்தில்

மூன்று நிலைகளிலும் காட்சி தருகிறார்.

ஒரே தலத்தில் முருகனின் வாழ்க்கை நிலைகளை தரிசிப்பது மிக அரிய அனுபவமாக கருதப்படுகிறது.

### 7. திரும்பிய மயில் எட்டுக்குடி

நாகப்பட்டினம் மாவட்டத்தில் அமைந்துள்ள எட்டுக்குடி சுப்பிரமணிய சுவாமி கோயில் மிகவும் புகழ்பெற்ற முருகத் தலங்களில் ஒன்று.

இங்கு முருகன் வள்ளி மற்றும் தெய்வானையுடன் மயில் மீது அமர்ந்திருக்கிறார்.

ஆனால் அந்த மயில் இடது பக்கம் திரும்பியபடி இருப்பது மிகவும் வித்தியாசமானதாக கருதப்படுகிறது.

### 8. அர்த்தநாரீஸ்வரர் அலங்காரத்தில் முருகன் கந்தாஸ்ரமம்

சேலம் அருகே உள்ள உடையார்பட்டி கந்தாஸ்ரமம் ஆன்மிக மையமாகப் புகழ்பெற்றது.

இங்கு முருகன் தண்டாயுதபாணி கோலத்தில் காட்சி தருகிறார்.
அவருக்கு எதிரே 18 கரங்களுடன் அம்பிகை அருள்பாலிக்கிறார்.

சிறப்பு நாட்களில் முருகனுக்கு அர்த்தநாரீஸ்வரர் அலங்காரம் செய்யப்படுகிறது.
அதில் வலப்புறம் ஆண் வடிவமும், இடப்புறம் பெண் வடிவமும் இருக்கும்.
இது சக்தியும் ஞானமும் ஒன்றிணைந்த தெய்வீக உண்மையை வெளிப்படுத்துகிறது.

### 9. பன்னிரண்டு கைகளுடன் முருகன் செஞ்சேரிமலை

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே உள்ள செஞ்சேரிமலை மந்திரகிரி ஸ்ரீ வேலாயுதசாமி திருக்கோயில் மிகவும் பழமையானது.

இங்கு முருகன் 12 கைகளுடன் அருள்பாலிக்கிறார்.

மூலவர் வேலாயுதசாமி
உற்சவர் முத்துக்குமாரர்.

இந்த வடிவம் முருகனின் சக்தி மற்றும் பாதுகாப்பை குறிக்கும் வடிவமாக கருதப்படுகிறது.

### 10. சப்தகன்னியர்களுடன் முருகன் திருமலைக்குமாரசுவாமி

தென்காசி மாவட்டம் செங்கோட்டை அருகே அமைந்துள்ள திருமலைக்குமாரசுவாமி திருக்கோயில் மிகவும் விசேஷமானது.
இங்கு முருகனுடன் சப்த கன்னியர்களுக்கும் தனி சன்னதி உள்ளது.
பொதுவாக சப்தகன்னியர் சிவன் கோயில்களில் காணப்படுவர். ஆனால் முருகன் தலத்தில் அவர்கள் இருப்பது மிகவும் அபூர்வமானதாக கருதப்படுகிறது.

முருக பக்தர்கள் கண்டிப்பாக தரிசிக்க வேண்டிய தலங்கள் இந்த பத்து திருத்தலங்களும் முருக பக்தர்களுக்கு தனித்துவமான ஆன்மிக அனுபவத்தை வழங்கும் தலங்களாக கருதப்படுகின்றன.

முருகன் ஒரே வடிவில் மட்டுமல்ல; பல்வேறு தெய்வீக பரிமாணங்களில் அருள்பாலிக்கிறார் என்பதை இந்த ஆலயங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

வாய்ப்பு கிடைத்தால் இந்த அபூர்வ முருகத் தலங்களுக்கு சென்று தரிசனம் செய்து வருவது பக்தர்களுக்கு மறக்க முடியாத ஆன்மிக அனுபவமாக இருக்கும்.

**எம்.அசோக்ராஜா,**
அரவக்குறிச்சிப்பட்டி
திருச்சி 620015

# சூரியா சென் வரலாறு

சூரியா சென் (22 மார்ச் 1894 - 12 சனவரி 1934) பிரித்தானிய இந்தியாவின் வங்காளத்தில் உள்ள சிட்டகாங் நகரத்தில் பிறந்த இந்திய விடுதலை இயக்க வீரர் ஆவார்.
பிரித்தானிய இந்திய அரசுக்கு எதிராக, 1930-இல் சிட்டகாங் ஆயுத கிடங்கை சூறையாடும் புரட்சியில் ஈடுபட்டதன் மூலம் அறியப்பட்டவர்.
சிட்டகாங் நகரத்தில் சூரியா சென் ஆசிரியராக பணியாற்றியவர்.
வங்காள மக்கள் சூரியா சென்னை மாஸ்டர் என்று மரியாதையுடன் அழைத்தனர்.
முர்சிதாபாத் மாவட்டத்தின் தலைமையிட நகரமான பெஹரம்பூரில் 1916-இல் கல்லூரியில் இளங்கலை பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருக்கும் போதே இந்திய விடுதலை இயக்கத்தின் பால் ஈர்க்கப்பட்டவர்.

இளமை வாழ்க்கை
சூரியகுமார் சென் 22 மார்ச் 1894-இல் சிட்டகாங் பகுதியில் உள்ள நவபரா கிராமத்தில் பிறந்தவர்.
இவரது தந்தை இரமணிரஞ்சன் சென் பள்ளிக்கூட ஆசிரியர் ஆவார். சூரியகுமார் சென் கல்லூரி படிப்பின் போதே இளைஞர்களின் புரட்சிகர அமைப்பான அனுசீலன் சமிதியில் சேர்ந்தார்.
கல்லூரி படிப்பு முடிந்த பின் சிட்டகாங் மாவட்டத்தில் உள்ள நந்தன்கனான் பகுதியில் அமைந்த தேசியப் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்தார்.
சிட்டகாங் ஆயுத கிடங்கு சூறையாடல்
சூரியா சென் தனது புரட்சிகர குழுவினருடன் 18 ஏப்ரல் 1930 அன்று சிட்டகாங் நகரத்தில் உள்ள காவல்துறையினரின் ஆயுத கிடங்கை சூறையாட திட்டமிட்டார்.






இத்திட்டத்தை நிறைவேற்ற இவரது தலைமையிலான குழு ஒன்று முதலில் தொலைபேசி, தந்தி மற்றும் தொடருந்து வசதிகளை செயலிழக்க செய்தித் தொடர்பு அமைப்புகளை முற்றிலும் அழித்து விட்டனர். இதனால் சிட்டகாங் நகரம் நாட்டின் பிற பகுதிகளுடன் செய்தித் தொடர்பு வசதிகளை இழந்தது.
சூரியா சென் குழுவினர் ஆயுத கிடங்கில் இந்திய தேசியக் கொடியை ஏற்றிய பின்னர் ஆயுத கிடங்கை சூறையாடினர்.



பிரித்தானியக் காவல் துறையினருக்கும் புரட்சிகர குழுவினருக்கும் இடையே நடந்த மோதலில் பன்னிரண்டு இந்திய விடுதலை இயக்கத்தினர் இறந்தனர், பலர் கைது செய்யப்பட்டனர், சூரியா சென்னும் மற்றும் சிலரும் அங்கிருந்து ஓடி மறைந்து விட்டனர்.
சூரியா சென்னின் கைதும் மரணமும்
சூரியா சென்னை தூக்கிலிட்ட தூக்கு மேடை, சிட்டகாங், வங்காளதேச அரசு அதனை வரலாற்று நினைவிடமாக அறிவித்துள்ளது.
சூரியா சென் பிரித்தானிய காவல்துறையிடம் அகப்படாது தலைமறைவாக இருந்து கொண்டே இந்திய விடுதலை இயக்கத்திற்குப் புத்துணர்வு ஊட்டிக்கொண்டே இருந்தார். ஒரு முறை அவரது உறவினரான நேத்திரா சென் என்பவரின் வீட்டில் தலைமறைவாக இருந்த போது, பிப்ரவரி 1933 இல் பிரித்தானியக் காவல்துறையால் கைது செய்யப்பட்டார்.

சூரியா சென்னைத் தூக்கில் இடுவதற்கு முன்பாக, அவரது ஒவ்வொரு பற்களையும் குறடால் பிடுங்கி எறிந்தனர். பின்னர் கால்கள் மற்றும் கைகளில் உள்ள அனைத்து மூட்டெலும்புகளை சுத்தியால் உடைத்தனர்.
உணர்விழந்த நிலையில் இருந்த சூரியா சென்னை தூக்கு மேடையில் ஏற்றினர்.
அவரது இறப்பிற்குப் பின் சடலத்தை தடிமனான இரும்புப் பெட்டியில் வைத்து, பிரித்தானிய காவல் துறையினர், வங்காள விரிகுடாவில் எறிந்தனர்.
பிரபல கலாச்சாரத்தில்
கருத்தோவியம்
இந்திய திரைப்பட இயக்குநர் அசுதேஷ் கவுரிகர் 2010-ஆம் ஆண்டில் கேலின் ஹம் ஜி ஜான் சே எனும் திரைப்படத்தில் சூரியா சென்னின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். இத்திரைப்படத்தில் அபிஷேக் பச்சன் சூரியா சென்னாக நடித்துள்ளார்.

சூரியா சென் நடத்திய சிட்டகாங் ஆயுதக் கிடங்கி சூறையாடல் நிகழ்வை விளக்கும் வகையில், 2012-ஆம் ஆண்டில் தேவவிரத பெயின் என்பவர் இயக்கிய சிட்டகாங் எனும் திரைப்படத்தில் மனோஜ் வாஜ்பாய் என்ற திரைப்பட நடிகர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

# காங்கிரஸை அவமதிக்கும் உரை: பிரதமருக்கு ஜெய்ராம் ரமேஷ் கண்டனம்

**புதுடெல்லி, ஏப்.20:**

பிரதமர் மோடியின் உரை காங்கிரஸை அவமதிப்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டுள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலர் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்தார்.

பிரதமர் மோடியின் உரைக்கு கண்டனம் தெரிவித்து எக்ஸ் தளத்தில் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்ட பதிவில், 'மகளிர் இடஒதுக்கீட்டை அமல்படுத்தும் மசோதா தோல்வியடைந்ததற்காக நாட்டு மக்களிடம் பிரதமர் மன்னிப்புக் கோருகிறார். ஆனால், மகளிரின் பெயரைப் பயன்படுத்தி பாகுபாடான தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கையை வஞ்சகமாகத் திணிக்க முயன்றகே அவர் உண்மையாக மன்னிப்புக் கேட்டிருக்க வேண்டும். ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு 30 மாதங்களுக்கும் மேலாக நடைமுறைப்படுத்தாமல் கிடப்பில் போடப்பட்ட சட்டத்தை, ஒரே நாளில் கூட்டாட்சித் தத்துவம் மற்றும் ஜனநாயகத்தை பலவீனமடையச் செய்யும் விதமாக அமல்படுத்த முயன்ற பிரதமர் மோடி தலைமையிலான அரசின் நாடகத்தை நாடே அறியும்.

தற்போதைய மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிக்க வழிவகை செய்யும் மசோதாவை உடனடியாக அறிமுகப்படுத்த பிரதமர் மோடி தயாரா?

மக்களவையில் தனது அரசு பெரும் பின்னடைவைச் சந்தித்ததை மூடி மறைக்க நாட்டு மக்களிடம் உரையாற்றும் பிரதமர் மோடி, செய்தியாளர்களைச் சந்தித்து இதுகுறித்து விளக்கமளிக்க இப்போதும் அஞ்சுகிறார்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

# விசாரணை நீதிபதிகளை உயர் நீதிமன்றம் பகிரங்கமாக விமர்சிப்பது சரியல்ல: உச்ச நீதிமன்றம்



**புதுடெல்லி, ஏப்.20:**

விசாரணை நீதிமன்ற நீதிபதிகளை உயர்நீதிமன்ற நீதிபதிகள் பகிரங்கமாக விமர்சிக்கும் போக்கு சரியல்ல என்று உச்சநீதிமன்றம் தெரிவித்தது.

வாடகைக்கு குடியிருப்பது தொடர்பான குற்ற வழக்கு ஒன்றில், குற்றஞ்சாட்டப்பட்டவரின் ஜாமீனை கொல்கத்தா உயர்நீதிமன்றம் ரத்து செய்து உத்தரவிட்டது. அந்த உத்தரவை உச்சநீதிமன்ற நீதிபதி விக்ரம் நாத், சந்தீப் மேத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு அண்மையில் ரத்து செய்தது. அப்போது அந்த அமர்வு கூறியதாவது: வழக்கு விசாரணையை மேற்பார்வை செய்யும்போது அல்லது மேல்முறையீடு மற்றும் மறுஆய்வு விசாரணை மேற்கொள்ளும்போது விசாரணை நீதிமன்ற நீதிபதிகள் குறித்து எதிர்மறையான கருத்துகளை உயர்நீதிமன்ற நீதிபதிகள் தெரிவிப்பது வாடிக்கையாகி வருகிறது.

மாவட்ட நீதித் துறையில் பணியாற்றும் நீதிபதிகளின் பாதுகாவலராக உயர்நீதிமன்றம் இருக்க வேண்டும். விசாரணை நீதிமன்ற நீதிபதியின் உத்தரவில் குறைபாடுகள் இருந்தால், உடனடியாக அவருக்கு எதிராக பாதகமான அல்லது இழிவுபடுத்தும் கருத்துகளை உயர்நீதிமன்ற நீதிபதிகள் தெரிவிக்கக் கூடாது.

இதுபோன்ற கருத்துகள் அல்லது கடுமையான விமர்சனங்கள் மாவட்ட நீதித் துறை நம்பிக்கையை இழக்க வழிவகுப்பதுடன், சம்பந்தப்பட்ட நீதிபதியின் தொழில்முறைவாழ்க்கையையும் சீர்குலைக்கக் கூடும் என்று தெரிவித்தது.

# மகளிர் மசோதா நிறைவேறாதது அரசின் தோல்வி அல்ல: மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு கருத்து

**புதுடெல்லி, ஏப்.20:**


மக்களவையில் மகளிர் இடஒதுக்கீட்டை அமல் படுத்த வகை செய்யும் மசோதா நிறைவேற்றப்படாதது அரசின் தோல்வி அல்ல என்று மத்தியஅமைச்சர் கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

நாடாளு மன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் சிறப்பு கூட்டம் கடந்த 16-ம் தேதி தொடங்கிது. அன்றைய தினம் மகளிர் இட ஒதுக்கீடு சட்டத்தை அமல்படுத்த வகை செய்யும் அரசியல் சாசன திருத்த (131-வது திருத்தம்) மசோதா 2026, தொகுதி மறுவரையறை மசோதா 2026, யூனியன் பிரதேச சட்டங்கள் (திருத்த) மசோதா 2026 ஆகியவை மக்களவையில் அறிமுகம் செய்யப்பட்டன. இதன் மீது நடைபெற்ற விவாதத்துக்குப் பிறகு நேற்று முன்தினம் வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில் மசோதா தோல்வி அடைந்தது. இந்நிலையில், 3-ம் நாளான நேற்று மக்களவை கூடியதும், சபாநாயகர் ஓம் பிர்லா நிறைவு உரையாற்றினார். இத்துடன் பட்ஜெட் கூட்டத் தொடர் முடிவடைந்தது. இதையடுத்து, நாடாளுமன்றம் மறு தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு செய்தியாளர்களிடம் கூறும்போது, “எங்களிடம் பெரும்பான்மை உள்ளது. ஆனால், அரசியலமைப்பு திருத்த மசோதாவை நிறைவேற்ற தேவையான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை எங்களுக்குக் கிடைக்கவில்லை. இதனால் வாக்கெடுப்பின் போது மகளிர் இட ஒதுக்கீடு மசோதா தோல்வி அடைந்தது.

எனினும், இதை அரசின் தோல்வியாகக் கருதக் கூடாது. இந்த மசோதா தோற்கடிக்கப்பட்டதால், பெண்களின் கோபத்தை காங்கிரஸ் கட்சி எதிர்கொள்ள வேண்டியிருக்கும். பெண்களுக்கு எதிரானவர்கள் என்ற பெயரால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்க்கட்சிகள் அனுபவிக்க வேண்டியிருக்கும்” என்றார்.

# அமெரிக்க போர் விமானத்தில் பறந்த விமானப் படை தளபதி ஏ.பி.சிங்



**புதுடெல்லி, ஏப்.20:**

இந்திய விமானப் படை தளபதி ஏ.பி. சிங், அமெரிக்காவின் எஃப்-15 ரக போர் விமானத்தில் பறந்தார். பாதுகாப்புத் துறைக்குத் தேவையான தளவாடங்களைக் கொள்முதல் செய்வதற்காகவும், பேச்சுவார்த்தை நடத்துவதற்காகவும் விமானப் படைத் தளபதி ஏ.பி. சிங் அண்மையில் அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

அதிநவீன வகை: இந்தப் பயணத்தின்போது அமெரிக்க பாதுகாப்புத் துறை அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார். இதனிடையே அமெரிக்காவின் நெவாடா மாகாணத்தில் உள்ள நெல்லிஸ் விமானப் படை தளத்துக்கு அவர் கடந்த 9-ம் தேதி சென்றார். அப்போது அங்கு நிறுத்தப் பட்டிருந்த போயிங் எஃப்-15 இளக்ஸ் ஈகிள்-2 ரகபோர் விமானத்தில் தளபதி ஏ.பி. சிங் ஏறி பறந்தார். அவருடன் அமெரிக்க விமானப் படையின் மேஜர் மேத்யூ பென்சன் உட்பட 2 பேர் இருந்தனர். அமெரிக்க விமானப்படையில் இடம்பெற்றுள்ள அதிநவீன வகை போர் விமானமாகும் இது. அமெரிக்காவின் நவீன வகை போர் விமானத்தின் திறன்களையும் வான் போரில் அதன் பங்கையும் இந்திய விமானப் படைத் தளபதி சிறப்பாகப் புரிந்து கொள்ள இந்தப் பயணம் உதவியதாக அமெரிக்க விமானப் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பிகார் புதிய அரசு மீது ஏப்.24-இல் நம்பிக்கை வாக்கெடுப்பு



**பாட்னா, ஏப்.20:**

பிகாரில் முதல்வர் சாம்ராட் சௌதரி தலைமையிலான புதிய அரசு மீது ஏப்.24-இல் நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

பிகார் முதல்வராக பதவி வகித்து வந்த ஐக்கிய ஜனதா தளம் தலைவர் நிதீஷ் குமார், மாநிலங்களவை எம்.பி.யாக அண்மையில் தேர்வானார். முதல்வர் பதவியில் இருந்து அவர் கடந்த ஏப்.14-இல் விலகியதையடுத்து, துணை முதல்வராக இருந்த பாஜகவின் சாம்ராட் சௌதரி புதிய முதல்வராக தேர்வு செய்யப்பட்டார். பிகாரின் 24-ஆவது முதல்வராக அவர் கடந்த ஏப்.15-இல் பதவியேற்றார். அவருடன் ஐக்கிய ஜனதா தளம் மூத்த தலைவர்கள் விஜய் குமார் சௌதரி, பிஜேந்திர பிரசாத் யாதவ் ஆகியோர் துணை முதல்வர்களாகப் பதவியேற்றனர்.

சாம்ராட் சௌதரியின் அமைச்சரவை விரைவில் விரிவாக்கம் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், மாநில அரசு சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'முதல்வர் சாம்ராட் சௌதரி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, சட்டப் பேரவையில் ஏப்.24-ஆம் தேதி நம்பிக்கை வாக்கெடுப்பு கோரவுள்ளது. இதையொட்டி, அன்று ஒரு நாள் அமர்வு நடைபெறும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல்வர் மாற்றத்தின் பின்னணி: கடந்த ஆண்டு நவம்பரில் நடைபெற்ற பிகார் பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி 202 இடங்களுடன் ஆட்சியைத் தக்கவைத்தது. பாஜக தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்ததுடன் (89), தொடர்ந்து இரண்டாவது தேர்தலாக ஐக்கிய ஜனதா தளத்தைவிட (85) அதிக இடங்களில் வெற்றி பெற்றது.

அதேநேரம், மாநில முதல்வராக 10-ஆவது முறையாக நிதீஷ் குமார் பதவியேற்றார். கிட்டத்தட்ட 20 ஆண்டுகளாக முதல்வராகப் பதவி வகித்துவந்த அவர், கடந்த மார்ச் மாதம் மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிட்டு எம்.பி.யானார்.

பாஜக தலைமையில் புதிய அரசு பதவியேற்க வழிவிடும் வகையில், முதல்வர் பதவியில் இருந்து நிதீஷ் குமார் ராஜிநாமா செய்தார்.

# “நேருக்கு நேர் விவாதிக்கத் தயாரா?” பவன் கல்யாணுக்கு பிரகாஷ் ராஜ் சவால்



**ஹைதராபாத், ஏப்.20:**

மகளிர் இடஒதுக்கீடு மசோதா தொடர்பாக ஆந்திர துணை முதல்வர் பவன் கல்யாண் வெளியிட்ட கருத்துக்கு, நடிகர் பிரகாஷ் ராஜ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். பொய்களைப் பரப்புவதை நிறுத்துமாறு கூறியுள்ள அவர், இது குறித்துப் பகிரங்க விவாதத்திற்கு வருமாறு பவன் கல்யாணுக்கு சவால் விடுத்துள்ளார்.

முன்னதாக சனிக்கிழமை எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருந்த பவன் கல்யாண், "நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை வலுப்படுத்தும் வரலாற்றுச் சிறப்புமிக்க வாய்ப்பை எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுத் தடுத்துள்ளன. இதன் மூலம் நாட்டின் முன்னேற்றத்தை விட அரசியல் கணக்குகளுக்கே அவர்கள் முக்கியத்துவம் அளிப்பது தெளிவாகிறது. பாலின சமத்துவம் மற்றும் உள்ளடக்கிய ஆட்சிமுறைக்கான நீண்டகால நடவடிக்கையை எதிர்க்கட்சிகள் தாமதப்படுத்துகின்றன" என்று சாடியிருந்தார். பவன் கல்யாணின் இந்தப் பதிவிற்குப் பதிலடி கொடுத்துள்ள பிரகாஷ் ராஜ், "பிரதமர் மோடியைத் திருப்திப்படுத்துவதற்காக குடிமக்களிடம் பொய் சொல்வதை நிறுத்துங்கள். மகளிர் இடஒதுக்கீடு மசோதா 2023-லேயே அங்கீகரிக்கப்பட்டது. அதை இப்போதும் நிறைவேற்ற முடியும். ஆனால், உங்கள் தரப்பினர் தொகுதி மறுவரையறை மசோதாவை நிறைவேற்றவே துடிக்கிறார்கள்.

தொகுதி மறுவரையறை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால், ஆந்திரா உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் பலவீனமடையும். உங்களைத் துணை முதல்வராக்கிய ஆந்திர மக்களின் சுயமரியாதையையும், மாநில உரிமைகளையும் அடகு வைக்காதீர்கள். இது குறித்து உங்களுக்கு விளக்க நான் விவாதத்திற்குத் தயார். நீங்கள் தயாரா?" என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

# சத்தீஸ்கரில் பாய்லர் வெடித்ததில் உயிரிழப்பு 23 ஆக உயர்வு

**ராய்ப்பூர், ஏப்.20:**

சத்தீஸ்கர் மாநிலம் சக்தி மாவட்டம் சிங்தாராய் பகுதியில் வேதாந்தா குழுமத்துக்கு சொந்தமான அனல் மின் நிலையம் உள்ளது. இங்கு கடந்த 14-ம் தேதி ஒரு பெரிய பாய்லர் திடீரென வெடித்து சிதறியது.

இதில் 10 தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர்.

இந்நிலையில் சிகிச்சை பெறுபவர்களில் ராய்ப்பூர், கல்டா மருத்துவமனையில் ஒருவரும் ராய்கர் மருத்துவக் கல்லூரியில் மற்றொருவரும் நேற்று உயிரிழந்தனர். இதனால் இந்த விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 23 ஆக உயர்ந்துள்ளது.

பாய்லர் வெடிப்புக்கான காரணம் குறித்து தலைமை கொதிகலன் ஆய்வாளர் அளித்துள்ள முதற்கட்ட அறிக்கையில், “பாய்லர் உலைக்குள் அதிக எரிபொருள் தேங்கியதால் அழுத்தம் வேகமாக அதிகரித்தது.

இந்த அழுத்தம் ஒரு கீழ் குழாயைப் பெயர்த்தெடுத்தது.

இதனால் கட்டமைப்பு தோல்வி ஏற்பட்டு வெடிப்பு நிகழ்ந்தது” என்று கூறப்பட்டுள்ளது.

சக்தியில் உள்ள தடய அறிவியல் ஆய்வகமும் இந்த காரணத்தை உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த அறிக்கை மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறையிடம் அளிக்கப்பட்டது. இது தொடர்பாக ஒரு மத்திய குழு விரிவான விசாரணை நடத்த உள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாகச் சக்தி மாவட்ட எஸ்.பி. உத்தரவின் பேரில் போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

# மக்களவையில் மகளிர் இடஒதுக்கீடு மசோதா தோல்வி: எதிர்க்கட்சிகளைப் பொறியில் சிக்க வைத்ததா?

**புதுடெல்லி, ஏப்.20:**

நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தில், மகளிர் இடஒதுக்கீடு வழங்க வகை செய்யும் அரசியலமைப்புத் திருத்த மசோதா தோல்வியில் முடிந்தது. அரசியலமைப்பு சட்டத் திருத்தம் போன்ற முக்கிய மசோதாக்களை நிறைவேற்ற நாடாளுமன்றத்தின் மக்களவை, மாநிலங்களவையில் மூன்றில் 2 பங்கு எம்.பி.க்களின் ஆதரவு தேவை. ஆனால், இரு அவைகளிலும் அந்தளவுக்கு ஆதரவு இல்லை என்று தெரிந்தும் இந்த மசோதாவை பாஜக அறிமுகப் படுத்தியது. இது எதிர்க்கட்சிகளுக்கு விரித்த வலை என்று கூறப்படுகிறது. வரலாற்று சிறப்புமிக்க மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை நிறைவேற்ற விடாமல் எதிர்க்கட்சிகள் தடுத்துவிட்டதாகவே தற்போது அறியப்படும். அதன் மூலம் எதிர்க்கட்சிகள் பாஜகவின் அரசியல் பொறியில் சிக்கிக் கொண்டதாகக் கூறப்படுகிறது. தமிழ்நாடு, மேற்கு வங்கத்தில் தேர்தல் நடைபெறுகிறது. இந்தச் சூழலில், மகளிர் மசோதா தோல்விக்குக் காரணம் எதிர்க்கட்சிகள் தான் என்ற கருத்தை தேர்தல் பிரச்சாரத்தின் போது பொது மக்களிடம் எடுத்துரைக்க பாஜக முயற்சிக்கும் என்கின்றனர். இது மேற்கூறிய 2 மாநில தேர்தலில் சாதகமாக மாறும் என்று பாஜக.வினர் கூறுகின்றனர்.

அண்மையில் நடைபெற்ற தேர்தல்களில் பாஜக.வுக்கு பெண் வாக்காளர்களின் ஆதரவு அதிகமாக கிடைத்தது. அதை மேலும் வலுப்படுத்த பாஜக முயற்சிக்கும். குறிப்பாகப் பெண் வாக்காளர்கள் முக்கிய இடம் பெற்ற மேற்கு வங்க மாநிலத்தில், பாஜக இந்தப் பிரச்சினையை ஒரு முக்கிய ஆயுதமாகப் பயன்படுத்தக் கூடும்.

எதிர்க்கட்சிகளின் சிக்கல்கள் அதோடு முடிந்துவிடவில்லை. பெண்களுக்கான இட ஒதுக்கீட்டுக்குள் ஓபிசி இட ஒதுக்கீடு கோரிக்கைக்கும் பாஜக தனது வாதங்களைத் தயாராக வைத்துள்ளது.

பெண்களுக்கான இடஒதுக்கீட்டுக்குள் முஸ்லிம்களுக்கான இட ஒதுக்கீடு கோரிக்கையை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா மக்களவையில் நிராகரித்தார். மத அடிப்படையில் முஸ்லிம்களுக்கு இடஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்பது அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிரானது என்று அவர் கூறினார். அதேபோல் ஓபிசி பெண்களுக்கான இட ஒதுக்கீடு தொடர்பாக, சாதிவாரி கணக்கெடுப்பு, அதன்பிறகு மக்களவையில் பரிசீலனை போன்ற நடைமுறைகளுக்குப் பிறகு முடிவெடுக்கலாம் என்று அமித் ஷா உறுதி அளித்துள்ளார். பாஜகவின் இந்த வாதங்களை எதிர்க்கட்சிகள் சமாளிப்பது கடினமாக இருக்கும். எனவே, மகளிர் இடஒதுக்கீடு மசோதா நிறைவேறவில்லை என்றாலும், அது பாஜகவின் அரசியல் செயல் திட்டத்தின் ஒரு முக்கிய அங்கமாகவே மாறியுள்ளது.

தேர்தலுக்காக எஞ்சியிருக்கும் பிரச்சார நாட்களில், பாஜக தனது உத்தியை திறம்படப் பயன்படுத்துவதில் அதன் வெற்றி அடங்கியுள்ளது.

# தலைமை தேர்தல் ஆணையரை பதவிநீக்க கோரி மீண்டும் நோட்டீஸ் அளிக்க எதிர்க்கட்சிகள் திட்டம்

**புதுடெல்லி,ஏப்.20:**

நாடு முழுவதும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்ஐஆர்) அமல்படுத்தும் விவகாரத்தில் தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ் குமாருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் பதவி நீக்க தீர்மானத்தை கொண்டு வந்தனர். ஆனால் மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவும், மாநிலங்களவை தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணனும் அந்த தீர்மானத்தை நிராகரித்தனர்.

தற்போது தொகுதி மறுவரையறை மசோதா தோல்வியடைந்ததை அடுத்து தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ்குமாரை பதவி நீக்க கோரி மீண்டும் தீர்மான நோட்டீஸ் தாக்கல் செய்ய எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இதுதொடர்பாக பல்வேறு எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். மேலும், காங்கிரஸ், திரிணாமூல் காங்கிரஸ், சமாஜ்வாதி கட்சி மற்றும் திமுக உள்ளிட்ட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த குறைந்தது ஐந்து மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவரைப் பதவியிலிருந்து நீக்கும் நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கான புதிய அறிவிப்பை வரைவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இருப்பினும், இந்த அறிவிப்பு எந்த அவையில் தாக்கல் செய்யப்படும் அல்லது கடந்த முறை செய்தது போல் இரு அவைகளிலும் அறிமுகப்படுத்தப்படுமா என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்றும் தகவல் வெளியாகி உள்ளது.

# அரிய நோய் பாதித்த சிறுமியின் மருந்துக்கு ஆந்திர அமைச்சர் லோகேஷ் ரூ.6 கோடி நிதியுதவி



**கர்னூல், ஏப்.20:**

ஆந்திர மாநிலம் கர்னூல் மாவட்டம், பெல்துர்த்தியை சேர்ந்த சுரேஷ் - புஷ்பலதா தம்பதிக்கு கடந்த ஆண்டு ஏப்.12-ம் தேதி பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்குப் பிறந்தது முதலே 'ஸ்பைனல் மஸ்குலர் அட்ராபி' (எஸ்எம்பி) எனும் அரிய வகை நோய் இருந்தது.

மேலும் நோய்க்குச் சிகிச்சை அளிக்க தேவைப்படும் ஒரு ஊசியின் மதிப்பு ரூ.16 கோடி எனவும் அந்த மருந்துவெளிநாட்டில் இருந்து வரவழைக்க வேண்டும் என்றும்மருத்துவர்கள் கூறியுள்ளனர். இதுதொடர்பாக குழந்தை புனர்விகாயின் பெற்றோர் சமூக வலைதளங்கள் மூலம் உதவி கோரினர். இதில் கடந்த ஓராண்டில் ரூ.10 கோடி மட்டுமே வசூலானது.

இது குறித்து தகவல் அறிந்த ஆந்திர கல்வித் துறை அமைச்சர் நாரா லோகேஷ், ஹைதராபாத்தில் அக்குழந்தை கிசிச்சை பெறும் மருத்துவமனைக்கு சென்றார். குழந்தையின் பெற்றோரை நலம் விசாரித்த அவர், மருத்துவர்களிடம் சிகிச்சை குறித்தும் கேட்டறிந்தார். தானே வழங்குவதாக உறுதி அளித்தார். இதையடுத்து வெளிநாட்டில் இருந்து வரவழைக்கப்பட்ட ஊசி மருந்தை நேற்று அவர் நேரில் வழங்கினார். அந்த ஊசி புனர்விகா க்கு செலுத்தப்பட்டது. அப்போதுகுழந்தையின் பெற்றோர் அவருக்கு நன்றி தெரிவித்தனர்.




## சென்னை: துணிக்கடையில் செம்பு வயர்களை திருடியவர் கைது

**சென்னை, ஏப்.20:** புரசைவாக்கம் பகுதியில் புதுப்பிக்கப்பட்டு வரும் துணிக் கடையில் செம்பு வயர்களைத் திருடிய இளைஞரை, போலீஸார் கைது செய்தனர்.

கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த பிரவீன்குமார் (27) சென்னையில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் கட்டுமான மேற்பார்வையாளராக பணியாற்றி வருகிறார். நிறுவனம் சார்பில், புரசைவாக்கம் நெடுஞ்சாலையில் உள்ள ஒரு துணிக் கடையை புதுப்பிக்கும் பணியில் இவர் ஈடுபட்டு வந்தார்.

கடந்த 16ம் தேதி இரவு பணிகளை முடித்துவிட்டுச் சென்ற பிரவீன் குமார். மறுநாள் காலை மீண்டும் கடைக்கு வந்து பார்த்தபோது, கடையில் வைக்கப்பட்டிருந்த மின்சார செம்பு வயர்களை மர்ம நபர்கள் யாரோ திருடிச் சென்றதை கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

இது குறித்து பிரவீன்குமார் அளித்த புகாரின் பேரில், வேப்பேரி போலீஸார் வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டனர். அப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமரா பதிவு களை ஆய்வு செய்தபோது, இளைஞர் ஒருவர் செம்பு வயர்களைத் திருடிச் சென்றது தெரியவந்தது.

விசாரணையில், திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட நபர் புரசைவாக்கம் திடீர் நகரைச் சேர்ந்த சதீஷ்குமார் (எ) கஜா (27) என்பது தெரியவந்தது. இதையடுத்து அவரை கைது செய்த போலீஸார். அவரிடமிருந்து ரூ.9 ஆயிரம் மதிப்புள்ள 10 கிலோ செம்பு வயர்களைப் பறிமுதல் செய்தனர்.

## இலங்கை கடல் பகுதியில் ரூ.161 கோடி மதிப்புள்ள போதை பொருள் பறிமுதல்

**ராமநாதபுரம், ஏப்.20:** இலங்கை கடற்படையினர், போதைப் பொருள் தடுப்பு பிரிவினர், சிறப்பு அதிரடி படையினர் நேற்று முன்தினம் மாலை இலங்கை தெற்கு கடல் பகுதியில் வந்துகொண் டிருந்த மீன்பிடி விசைப்படகை நிறுத்தி திடீர் சோதனை நடத்தினர்.

அப்படகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 161 கிலோ போதைப்பொருளை கைப்பற்றினர். இதன் சர்வதேச மதிப்பு ரூ.161 கோடியாகும். இதுதொடர் பாக இலங்கையைச் சேர்ந்த 4 பேர் கைது செய்யப்பட்டு இலங்கை திக்கோவிட்ட துறைமுகத்துக்கு அழைத்துச் சென்றனர்.

## புளியந்தோப்பு காவல் மாவட்டத்தில் 7 ரவுடிகள் அதிரடி கைது

**பெரம்பூர், ஏப்.20:** சென்னை புளியந்தோப்பு கே.பி. பார்க் பகுதியை சேர்ந்தவர் சண்முகம் (54). இவர் நேற்றுமுன்தினம் இரவு கே.பி.பார்க் வெளியே நின்றிருந்தபோது குடிபோதையில் வந்த 4 பேர் சண்முகத்திடம் தகராறு செய்து கத்தியால் வெட்டினர். இதில் காயம் அடைந்த சண்முகம் ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இதுகுறித்து பேசின்பிரிட்ஜ் போலீசார் வழக்குபதிவு செய்து விசாரித்து கே.பி.பார்க் பகுதியைசேர்ந்த சந்தோஷ் என்கின்ற தவக்களை சந்தோஷ் (27), சூர்யா என்கின்ற பெண்டு சூர்யா (20), பிரகாஷ் என்கின்ற ஸ்டீபன் பிரகாஷ் (26), ஜவ்வு அப்பு என்கின்ற பிரேம்குமார் (21) ஆகிய சரித்திர பதிவேடு ரவுடிகளை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

வியாசர்பாடி உதயசூரியன் நகர் பகுதியை சேர்ந்த ராஜசேகர் என்கின்ற காட்டன் ராஜ என்ற சரித்திர பதிவேடு ரவுடியை நேற்று எம்கேபி நகர் போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர். திடீர் நகர் பகுதியில் பொதுமக்களை அச்சுறுத்தி வந்த வியாசர்பாடி பி.கல்யாணபுரம் பகுதியை சேர்ந்த விக்ரம் (42) என்ற சரித்திர பதிவேடு ரவுடியை வியாசர்பாடி போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர். பனந்தோப்பு ரயில்வே காலனி பகுதியில் குடிபோதையில் பொதுமக்களை அச்சுறுத்தி வந்த அயனாவரம் பகுதியை சேர்ந்த இளவரசன் (26) என்ற சரித்திர பதிவேடு ரவுடியை ஓட்டேரி போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## நயினார் தொகுதியில் மோதல் சசிகலா வேட்பாளர் மீது கல்வீச்சு: பட்டா கத்தி, ஆயுதங்கள் பறிமுதல்

### 50 பேர் மீது வழக்கு



**விருதுநகர், ஏப்.20:** விருதுநகர் மாவட்டம், சாத்தூர் தொகுதியில் சசிகலாவின் அஇபுதமமுக கூட்டணியில் பசும்பொன் மக்கள் தேசம் கட்சி நிறுவனர் இசக்கிராஜா போட்டியிடுகிறார். இவர் நேற்று முன்தினம் இரவு வழக்கம்போல் வெம்பக்கோட்டை பகுதியில் பிரசாரத்தில் ஈடுபட்டு கொண்டிருந்தார். அப்போது அதே பகுதியில் பாஜ மாநில தலைவர் நயினார் நாகேந்திரனுக்கு ஆதரவாக நேதாஜி சுபாஷ் சேனை தலைவர் மகாராஜன் உள்ளிட்டோர் பிரசாரம் செய்து கொண்டிருந்தனர். இதனிடையே அந்த வழியாக இசக்கிராஜா உடன் வந்த நிர்வாகிகளின் கார் மீது மகாராஜன் தரப்பினர் கற்களை வீசி தாக்குதல் நடத்தியதாக கூறப்படுகிறது. இதனால் இரண்டு கட்சியினர் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

வாக்குவாதம் முற்றவே இருதரப்பினரும் கைகலப்பில் ஈடுபட்டனர். அப்பகுதியில் இருந்த போலீசார் இருதரப்பினரையும் விலக்கிவிட்டு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். தகவல் அறிந்து விருதுநகர் மாவட்ட எஸ்பி ஸ்ரீநாதா சம்பவ இடத்திற்கு வந்து, இருதரப்பினரிடமும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். இதனால் அப்பகுதியில் அதிகளவு போலீசார் குவிக்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. இதேபோன்று 2 நாட்களுக்கு முன்பும் இரண்டு கட்சியினர் இடையே பயங்கர மோதல் ஏற்பட்டது. இதில் பட்டாகத்தி உள்ளிட்ட ஆயுதங்களை பறிமுதல் செய்து 50க்கும் மேற்பட்டோர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

## முதல்கட்ட தபால் வாக்குப் பதிவு விறுவிறுப்பு: நீண்ட வரிசையில் காத்திருந்து வாக்களித்த போலீஸார்



**சென்னை, ஏப்.20:** சென்னையில் காவல் துறையினருக்கான தபால் வாக்குப் பதிவு நேற்று விறுவிறுப்பாக நடைபெற்றது. போலீஸார் நீண்ட வரிசையில் காத்திருந்து ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினர்.

சென்னை மாவட்ட எல்லைக்கு உட்பட்ட 16 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும், தேர்தல் பணிக்காக காவலர்கள், ஊர்க் காவல் படையினர் உட்பட மொத்தம் 22,248 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் 2 கட்டமாக தபால் வாக்குப் பதிவு செய்ய தேர்தல் ஆணையம் விரிவான ஏற்பாடுகளை செய்துள்ளது. இதற்கான விண்ணப்ப படிவங்கள் ஏற்கனவே அவர்களுக்கு வழங்கப்பட்டன.

அதன்படி, முதல்கட்ட வாக்குப்பதிவு நேற்று நடைபெற்றது. இதற்காக, வில்லிவாக்கம், அண்ணாநகர், பெரம்பூர் உள்ளிட்ட 16 தொகுதிகளிலும் தேர்தல் நடத்தும் அலுவலரின் அலுவலகத்தில்சிறப்புமையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

காவலர்கள் அங்கு நீண்ட வரிசையில் காத்திருந்து ஆர்வத்துடன் வாக்களித்தனர். இந்த நடைமுறைகள் அனைத்தும் தேர்தல் நடத்தும் அலுவலர்களின் நேரடி மேற்பார்வையில் நடைபெற்றதோடு, வெளிப்படைத்தன்மையைஉறுதி செய்ய, முழுமையாக சிசிடிவி கேமராக்கள் மூலமாகவும் பதிவு செய்யப்பட்டன.

விடுபட்ட காவலர்களுக்கான 2-ம் கட்ட தபால் வாககுப்பதிவு நாளை (20-ம் தேதி) நடைபெற உள்ளது. "தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள காவலர்கள் 100 சதவீதம் தங்களது வாக்குகளைப் பதிவு செய்ய வேண்டும். யாரும் விடுபடாமல் ஜனநாயகக் கடமையை நிறைவேற்ற வேண்டும்" என்று சென்னை மாநகரக் காவல் ஆணையர் அபின் தினேஷ் மோடக் வலியுறுத்தியுள்ளார்.

## சென்னையில் உரிய ஆவணம் இன்றி கொண்டு சென்ற ரூ.6.16 லட்சம் ரொக்கம் பறிமுதல்




**சென்னை, ஏப்.20:** தேர்தல் பறக்கும் படை பல்வேறு இடங்களில் நடத்திய வாகன சோதனையில் மொத்தம் ரூ.6,16,600 ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது.

தமிழக சட்டப்பேரவை தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால், தேர்தல் பறக்கும் படைகள், நிலை கண்காணிப்பு படைகள் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றன. முறையான ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்படும் ரூ.10 ஆயிரத்துக்கு மேல் மதிப்புள்ள பொருட்கள், ரூ.50 ஆயிரத்துக்கு மேல் ரொக்கமாக கொண்டு செல்லப்படும் பணம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டு அரசு கருவூலத்தில் ஒப்படைக்கப்படும்.

சென்னை மாவட்டத்தில், ராயபுரம். ஆயிரம் விளக்கு, விருகம்பாக்கம் தொகுதிகளில் தலா 4 பறக்கும் படைகள் மற்றும் மீதமுள்ள 13 தொகுதிகளில் தலா 3 பறக்கும் படைகள் வீதம், 51 பறக்கும் படைகளும், ராயபுரம், சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி, விருகம்பாக்கம் தொகுதிகளில் தலா 4 நிலையான கண்காணிப்புக் குழுக்கள் மற்றும் மீதமுள்ள 13 தொகுதிகளில் தலா 3 நிலையான கண்காணிப்புக் குழுக்கள் என 51 நிலையான கண்காணிப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு 24 மணி நேரமும் கண்காணித்து வருகின்றனர்.

இதன்படி, நேற்று முன்தினம் பறக்கும் படையினர் நடத்திய வாகன சோதனையின் போது, வில்லிவாக்கம் தொகுதியில் ரூ.95 ஆயிரம், ஆயிரம் விளக்கு தொகுதியில் ரூ.2 லட்சம், வேளச்சேரி தொகுதியில் ரூ.62,100 மற்றும் நிலையான கண்காணிப்புக் குழுவினர் நடத்திய வாகான சோதனையின்போது,துறைமுகம் தொகுதியில் ரூ.2,59,500 என மொத்தம் ரூ.6,16,600 ரொக்கப் பணம் பறிமுதல் செய்யப்பட்டு கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக சென்னை மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.குமர குருபரன் தெரிவித்துள்ளார்.

## அனைத்து வாக்குச் சாவடிகளின் நுழைவு வாயிலில் வேட்பாளர் பெயர் வரிசை சுவரொட்டி ஒட்டப்படும்: தேர்தல் ஆணையம்

**சென்னை, ஏப்.20:** அனைத்து வாக்குச்சாவடிகளின் நுழைவுவாயில் பகுதிகளிலும் வேட்பாளர்களின் பெயர் வரிசை பட்டியல் பெரிய சுவரொட்டியாக ஒட்டப்படும் என்று தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

தவெக தலைவர் விஜய், சென்னை பெரம்பூர் தொகுதியில் போட்டியிடுகிறார். வேட்பாளர்கள் பட்டியலில் இவர் பெயர் 16-வது இடத்தில் வருகிறது.

ஆனால், 'நோட்டா' (யாருக்கும் வாக்களிக்க விரும்பவில்லை) வசதி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக தேர்தல் ஆணையம் தயாரித்துள்ள துண்டுப் பிரசுரத்தில் 'நோட்டா' என்பது 16-வது இடத்தில் இருந்துள்ளது. இது பெரம்பூர் தொகுதி மக்களிடம் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகம் அளித்துள்ள விளக்கம்: சில ஆண்டுகளுக்கு முன்பு 'நோட்டா' வசதி அறிமுகம் செய்யப்பட்டது. அப்போது, வாக்குப் பதிவு இயந்திரத்தின் கடைசி (16-வது) பட்டன் 'நோட்டா' என்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த துண்டுப் பிரசுரங்களை தேர்தல் ஆணையம் அச்சிட்டது. அதை தவறுதலாக எடுத்து யாரோ தற்போது விநியோகம் செய்துள்ளனர்.

ஒரு வாக்குப்பதிவு இயந்திரத்தில் 16 வேட்பாளர்களின் பெயர்கள் இடம்பெறும். அதற்கு மேல் வேட்பாளர் இருந்தால், 2-வது வாக்குப்பதிவு இயந்திரம் இணைக்கப்படும். அந்த வகையில், பெரம்பூரில் 47 வேட்பாளர்கள் போட்டியிடுவதால், மொத்தம் 3 வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படும்.

பதிவு செய்யப்பட்ட கட்சியின் வேட்பாளரான தவெக தலைவர் ஜோசப் விஜய் பெயரின் முதல் எழுத்தான ஜோ. தமிழ் அகர வரிசையின் இறுதியில் வருவதால், பட்டியலில் அவரது பெயர் 16-வதாக உள்ளது.

பெரம்பூரை பொருத்தவரை, 3-வது இயந்திரத்தின் கடைசி பட்டன் நோட்டாவாக இருக்கும். 15-க்கும் குறைவாக வேட்பாளர்கள் போட்டியிடும் தொகுதியில் மட்டும் தான் நோட்டா 16-வது இடத்தில் இடம்பெறும்.

## கோவையில் குடோனில் பதுக்கிய 1,720 சிலிண்டர்கள் பறிமுதல்

**கோவை, ஏப்.20:** அமெரிக்க-ஈரான் நாடுகளுக்கு இடையே நடந்த போர் காரணமாக எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட்டது. குறிப்பாக வர்த்தக சிலிண்டர்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவியது.

எனவே சிலிண்டர்கள் பதுக்குவதை தடுக்க தீவிர கண்காணிப்பில் ஈடுபடும்படி உணவு கடத்தல் தடுப்பு பிரிவு போலீசாருக்கு உத்தரவிடப்பட்டது.

கோவை மாவட்டத்தில் கலெக்டர் பவன்குமார் உத்தரவின்பேரி லும், ஐ.ஜி. ரூபேஷ்குமார் மீனா அறிவுறுத்தலின்படியும் மதுரை மண்டல சூப்பிரண்டு ஸ்ரீநிவாச பெருமாள் கண்காணிப்பில், கோவை போலீஸ் துணை சூப்பிரண்டு மரியமுத்து தலைமையில் உணவு கடத்தல் தடுப்பு பிரிவு போலீசார் தீவிர சோதனை நடத்தினார்கள்.

கடந்த ஒரு மாதத்தில் கோவை மற்றும் பொள்ளாச்சியில் நடத்தப்பட்ட சோதனையில் குடோன்களில் சட்டவிரோதமாக பதுக்கி வைத்து இருந்த 1,720 வர்த்தக சிலிண்டர்கள் மற்றும் 14 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இதுதொடர்பாக மொத்தம் 18 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உள்ளது. 30 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

இந்த சோதனை தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. சிலிண்டர் பதுக்கல் தொடர்பாக தகவல் கிடைத்தால் தெரிவிக்கலாம் என்றும், சட்டவிரோதமாக சிலிண்டர்களை பதுக்கி வைக்கும் நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உணவு கடத்தல் தடுப்பு பிரிவு போலீசார் தெரிவித்து உள்ளனர்.

## கண்ணகி கோயிலில் மே 1-ம் தேதி சித்திரை முழு நிலவு விழா ஏற்பாடுகள்



**கூடலூர், ஏப்.20:** மங்கலதேவி கண்ணகி கோயில் திருவிழா முன்னேற்பாடு பணிகள் குறித்த ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் இரு மாநில அதிகாரிகள் தலைமையில் தேக்கடியில் நடைபெற்றது.

தேனி மாவட்டத்தின் தமிழக எல்லையான கூடலூர் மேற்குத் தொடர்ச்சி மலையின் விண்ணேற்றிப்பாறை எனும் இடத்தில் மங்கலதேவி கண்ணகி கோயில் அமைந்துள்ளது.

இக்கோயில் சித்திரை முழு நிலவு விழா மே 1-ம் தேதி நடைபெற உள்ளது.


விழா நடத்துவது தொடர்பாக ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் தேக்கடியில் நடைபெற்றது. தேனி, இடுக்கி மாவட்டங்களின் ஆட்சியர்கள் ரஞ்ஜீத்சிங், தினேஷன் சேருவாட் ஆகியோர் தலைமை வகித்தனர். இடுக்கி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சாபூமத்யூ, சார் ஆட்சியர் அனுப்கார்க் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பக்தர்கள் வசதிக்காக குமுளியில் இருந்து கோயிலுக்கு செல்ல ஜீப்களை இயக்குவது, குடிநீர், தற்காலிக பந்தல், கழிப்பிட வசதி, பாதைகளை செப்பனிடுதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

மேலும் பளியன்குடி வழியாக வரும் பக்தர்களுக்கும் உரிய வசதிகளை செய்து தர முடிவு செய்யப்பட்டது. பக்தர்கள் குமுளியில் இருந்து காலை 6 மணி முதல் பகல் 1.45 மணி வரையும், கோயிலில் இருந்து மாலை 5.30 மணிக்குள் வெளியேறவும் நேரக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ வில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பக துணை இயக்குநர் விவேக் பரஸ்நாத் யாதவ், பெரியாறு புலிகள் காப்பக துணை இயக்குநர் லட்சுமி, மாவட்ட வன அலுவலர் கிரண், வட்டாரப் போக்குவரத்து துறை அலுவலர் மாணிக்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கீழடியில் குறுகிய வாய் கொண்ட சுடுமண் பானை கண்டெடுப்பு




**சிவகங்கை, ஏப்.20:** சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் யூனியனை சேர்ந்த கீழடி பகுதியில் மத்திய-மாநில அரசுகள் சார்பில் ஏற்கனவே 10 கட்ட அகழாய்வு பணிகள் நடந்து முடிந்துள்ளது. 2,600 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பழங்கால மக்கள் பயன்படுத்திய பொருட்கள் கிடைக்கப்பெற்று கீழடியில் உள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள், சுற்றுலா பயணிகள், பள்ளி மாணவ-மாணவிகள் என தினமும் ஏராளமானோர் வந்து பார்வையிட்டும், 'செல்பி' எடுத்தும் மகிழ்கின்றனர். இதேபோல் கீழடியில் அகழாய்வு நடைபெற்ற இடத்திலேயே திறந்தவெளி அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த திறந்தவெளி அருங்காட்சியகத்தை தினமும் பொதுமக்கள். சுற்றுலா பயணிகள், மாணவ, மாணவிகள், வெளிநாட்டினர் என பார்வையிட்டு வருகின்றனர்.

இதற்கிடையே, 11-ம் கட்ட அகழாய்வு பணிகள் திறந்தவெளி அருங்காட்சியகம் அருகே 2 குழிகள் தோண்டி பணிகள் நடைபெற்று வருகின்றன. கீழடி அகழாய்வு தள இயக்குனர் ரமேஷ் தலைமையில் தொல்லியல் துறை மாணவர்கள், 20-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இந்த பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில், கீழடி 11ம் கட்ட அகழாய்வில் மிகச்சிறிய வித்தியாசமான வடிவிலான குறுகிய வாய் கொண்ட சுடுமண் பானை கண்டெடுக்கப்பட்டு உள்ளது. இதுவரை கீழடியில் இது போன்ற பானை கண்டெடுக்கப்பட்டதில்லை. கெண்டி மூக்கு பானை, சிவப்பு நிற முடியுடன் கூடிய பானை என அடுத்தடுத்த அகழாய்வில் கிடைத்தாலும் தற்போது கிடைத்த பானை அதில் இருந்து புதிய வடிவத்தில் உள்ளதாக கருதப்படுகிறது.

## விடுமுறை தினம்: கன்னியாகுமரியில் குவிந்த சுற்றுலா பயணிகள்



**கன்னியாகுமரி, ஏப்.20:** சர்வதேச சுற்றுலா தலமான கன்னியாகுமரிக்குதினமும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறார்கள்.

விடுமுறை நாட்களிலும், பண்டிகை நாட்களிலும் ஏராளமான சுற்றுலா பயணிகள் கன்னியாகுமரிக்கு வருவார்கள்.

இந்தநிலையில் இன்று ஞாயிறு விடுமுறையையொட்டி காலையில் இருந்தே கன்னியாகுமரியில் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் குவிந்துள்ளனர். அவர்கள் முக்கடலும் சங்கமிக்கும் திரிவேணி சங்கமம் கடற்கரை, சன்ரைஸ் பாயின்ட் போன்ற பகுதிகளில் நள்ளிரவு முதல் காத்திருந்து சூரிய உதயத்தை கண்டு ரசித்தனர்.

கடற்கரையில் சுற்றுலா பயணிகளின் கூட்டம் அதிகமாக இருந்ததால் போலீசாரும், கடலோர பாதுகாப்பு குழும போலீசாரும், சுற்றுலா பாதுகாவலர்களும் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# பீர் பாட்டிலில் தவெக வேட்பாளர் படம்: தேனியில் பரபரப்பு




**தேனி, ஏப்.20:** தேனி மாவட்டம் பெரியகுளம் (தனி) சட்டமன்ற தொகுதியில் தமிழக வெற்றிக் கழக வேட்பாளராக சபரி ஐங்கரன் போட்டியிடுகிறார். இவர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்.

இந்த நிலையில், பீர் பாட்டிலில் த.வெ.க. வேட்பாளர் சபரி ஐங்கரன் மற்றும் கட்சி தலைவர் விஜய்யின் புகைப்படத்துடன், 'விசில்' சின்னத்திற்கு வாக்கு சேகரிக்கும் ஸ்டிக்கர் ஒட்டப்பட்ட படம் சமூக வலைதளங்களில் பரவியது. இது கட்சியினரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதையடுத்து, த.வெ.க. நகர செயலாளர் தினேஷ் தலைமையில் அக்கட்சியினர் பெரியகுளம் போலீஸ் துணை சூப்பிரண்டு அலுவலகத்திற்கு சென்று புகார் மனு அளித்தனர். கட்சியின் தலைவர் மற்றும் வேட்பாளரின் புகைப்படங்களை பீர் பாட்டிலில் ஒட்டி அதனை சமூக வலைத்தளங்களில் பரப்பியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனுவில் கூறி யுள்ளனர்.

# வேட்டவலம் அருகே பஸ் கவிழ்ந்து ஓட்டல் தொழிலாளி பலி - 16 பேர் படுகாயம்



**வேட்டவலம், ஏப்.20:** திருவண்ணாமலையில் இருந்து 30-க்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றிக்கொண்டு இன்று அதிகாலை விழுப்புரம் நோக்கி அரசு பஸ் சென்று கொண்டிருந்தது.

இந்த பஸ்சில் திருச்சிராப்பள்ளி மாவட்டம் லால்குடி அடுத்த மாலவாய் கிராமத்தை சேர்ந்த கனகராஜ் (வயது 40) என்பவர் பயணம் செய்தார். இவர் சமயபுரத்தில் உள்ள ஒரு ஓட்டலில் வேலை செய்து வருகிறார். பஸ் வேட்டவலம் வந்ததும் பயணிகள் இறங்கினர். மீண்டும் பஸ் வேட்டவலம் -விழுப்புரம் சாலையில் சென்றபோது டிரைவர் தூக்க கலக்கத்தில் இருந்ததாக கூறப்படுகிறது. அப்போது டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் சாலையில் தறிக்கெட்டு ஓடியது.

பின்னர் சாலையோரம் உள்ள பள்ளத்தில் பஸ் கவிழ்ந்தது. பஸ்சில் பயணம் செய்த கனகராஜ் பலத்த காயம் அடைந்து சம்பவ இடத்திலேயே துடிதுடித்து பரிதாபமாக இறந்தார். ஒருவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டது. பயணிகள் 15 பேர் படுகாயம் அடைந்தனர். அந்த வழியாக சென்றவர்கள் இதுகுறித்து வேட்டவலம் போலீசார் மற்றும் தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். விரைந்து வந்த போலீசார் மற்றும் தீயணைப்பு துறையினர் பஸ்சின் இடிபாடுகளுக்குள் சிக்கி இருந்த பயணிகளை மீட்டனர். பின்னர் படுகாயம் அடைந்தவர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக விழுப்புரம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். கனகராஜ் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக திருவண்ணாமலை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் போலீசார் விபத்து குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

# தலையணையால் அமுக்கி தையல் தொழிலாளி கொலை: மனைவி, கள்ளக்காதலனுடன் கைது



**திண்டுக்கல், ஏப்.20:** திண்டுக்கல் மாவட்டம், நத்தம் பகுதியை சேர்ந்த ரவிக்குமார் (வயது 28), தையல் தொழிலாளி. அவருடைய மனைவி கார்த்திகா(25). இவர்களுக்கு ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர். ரவிக்குமார் திண்டுக்கல் அருகே ரெட்டியபட்டியில் வாடகை வீட்டில் குடும்பத்துடன் வசித்து வந்தார்.

அந்த பகுதியில் உள்ள தையல் கடையில் அவர் வேலை செய்து வந்தார். இந்த நிலையில் கடந்த 16-ம் தேதி வழக்கம்போல் வேலைக்கு சென்று விட்டு வீட்டுக்கு வந்த ரவிக்குமார், சாப்பிட்டுவிட்டு தூங்கினார். மறுநாள் காலை (நேற்று முன்தினம்) படுக்கை அறையில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். இதுகுறித்து தகவல் அறிந்ததும் திண்டுக்கல் தாலுகா போலீசார் விரைந்து சென்று விசாரணை நடத்தினர்.

அப்போது ரவிக்குமாரின் காது, வாயில் இருந்து ரத்தம் வழிந்தபடி இருந்தது. இது போலீசாருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது.

எனவே அவரது மனைவி கார்த்திகாவிடம் போலீசார் துருவித் துருவி விசாரணை நடத்தினர். இதில் ரவிக்குமாரை, அவரது மனைவியே கள்ளக்காதலனுடன் சேர்ந்து கொலை செய்த அதிர்ச்சி தகவல் வெளியானது.

இதைத்தொடர்ந்து போலீசார் சந்தேக மரணம் என்பதை கொலை வழக்காக மாற்றி கார்த்திகா, விக்னேஷ், நாகராஜ் ஆகிய 3 பேரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# தூத்துக்குடியில் பஞ்சு குடோனில் பயங்கர தீவிபத்து: பல கோடி மதிப்பிலான பொருட்கள் எரிந்து சேதம்



**தூத்துக்குடி, ஏப்.20:** தூத்துக்குடி சிப்காட் தொழில்பேட்டை வளாக பகுதியில் தனியார் ஏற்றுமதி நிறுவனத்திற்கு சொந்தமான பஞ்சு குடோன் ஒன்று உள்ளது. இங்கு வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்காக ஏராளமான பஞ்சு மூட்டைகள் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. நேற்று பிற்பகலில், கிடங்கின் ஒரு பகுதியில் திடீரென தீப்பிடித்து எரியத் தொடங்கியது. பஞ்சு என்பதால் தீ மளமளவென கிடங்கு முழுவதும் பரவி, கரும்புகை வெறியேறியது.

இதுகுறித்து தகவல் அறிந்த மாவட்ட அலுவலர் கருணாகரன் தலைமையிலான தீயணைப்பு வீரர்கள், 3 தீயணைப்பு வாகனங்களில் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். தீயின் வீரியம் அதிகமாக இருந்ததால், நீண்ட நேரம் போராடித் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். அப்போது, உள்ளே ஏற்பட்ட கடும் வெப்பம் காரணமாக கிடங்கின் ஒரு பக்கச் சுவர் திடீரென இடிந்து விழுந்தது. இதனால் அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த விபத்தில் கிடங்கில் வைக்கப்பட்டிருந்த ரூ.25 கோடி மதிப்பிலான பஞ்சு மூட்டைகள் மற்றும் இதர தளவாடப் பொருட்கள் முற்றிலும் எரிந்து சேதமாகின. தீ விபத்திற்கான காரணம் குறித்து சிப்காட் போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். மின் கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதா அல்லது வேறு ஏதேனும் காரணமா என்ற கோணத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது.

# கோட்டக்குப்பம் அருகே மீனவர்கள் கடலில் இறங்கி போராட்டம்- தேர்தலை புறக்கணிப்பதாக அறிவிப்பு



**கோட்டகுப்பம், ஏப்.20:** புதுவை அடுத்த தமிழக பகுதியான கோட்டகுப்பம் நகராட்சிக்குட்பட்ட நடுக்குப்பம் மீனவர்கள் சட்டமன்ற தேர்தலை புறக்கணிப்பதாக கூறி கடலில் இறங்கி கருப்பு கொடி ஆர்பாட்டம் நடத்தினர்.

அப்போது நடுக்குப்பம் மீனவ கிராமத்தைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள் என சுமார் 500-க்கும் மேற்பட்டோர் கடலில் இறங்கி அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர்.

கடலில் இறங்கி மீனவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்துவதை அறிந்த கோட்டகுப்பம் போலீஸ் இன்ஸ்பெக்டர் விஸ்வநாதன், கடலோர காவல் படை இன்ஸ்பெக்டர் அம்பிகா சப்-இன்ஸ்பெக்டர் சுரேஷ் மற்றும் 50-க்கும் மேற்பட்ட போலீசார் அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு கடலில் இறங்கி போராட்டம் நடத்திய மீனவர்களை சமாதானப்படுத்தினர். போலீசாரின் பேச்சு வார்த்தைக்கு இணங்க மீனவர்கள் போராட்டத்தை கைவிட்டு களைந்து சென்றனர்.

இதுகுறித்து போராட்டம் நடத்திய மீனவர்கள் கூறுகையில், பெரியக்கோட்டக்குப்பம் பகுதியில் வாழும் ஆதிதிராவிடர் மக்களின் சுடுகாட்டுக்கும் கடலுக்கும் உள்ள இடைவெளி மிகவும் குறைவாக இருக்கிறது. இதனால் கடல் அரிப்பின் போது சடலங்கள் வெளியே வருகிறது. மேலும் சடலங்களை மீன்கள் சாப்பிடுவதால் அதனை உணவாக சாப்பிடும் மனிதர்களுக்கு பலவிதமான நோய்கள் உருவாகிறது.

இந்த சுடுகாட்டில் புதைக்கப்படும் சடலங்களால் நடுக்குப்பம் மீனவர்களின் குடிநீரும் பாதிப்படைந்துள்ளது. இந்த சுடுகாட்டை அப்புறப்படுத்த கோரி கடந்த 30 ஆண்டுகளாக நடுக்குப்பம் மீனவர்கள் கோரிக்கைவைத்தும் அதிகாரிகள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காததால் நடக்கவுள்ள சட்டமன்றத் தேர்தலை புறக்கணிக்கிறோம் என கூறினர்.

மேலும் நடுக்குப்பம் மீனவ கிராம மக்கள் தேர்தலை புறக்கணிப்பதாக கூறி பல்வேறு இடங்களில் பதாகைகளை வைத்துள்ளனர்.

இது போல பெரியகோட்டக்குப்பம் ஆதிதிராவிடர் மக்களும் சுடுகாட்டில் உள்ள ஆக்கிரமிப்பு அதிகாரிகள் அப்புறப்படுத்தாததால் தேர்தலை புறக்கணிப்பதாக பல்வேறு இடங்களில் பதாகைகள் வைத்துள்ளதால் கோட்டகுப்பம் நகராட்சி பகுதியில் பதற்றமான சூழல் உருவாகியுள்ளது.

# டெல்டா, மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் மிதமான மழைக்கு வாய்ப்பு



**சென்னை, ஏப்.20:** சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சுமார் 0.9 கிமீ உயரத்தில், கிழக்கு உத்தரப் பிரதேசம் முதல் மன்னார் வளைக்குடா வரை கிழக்கு மத்தியப் பிரதேசம், விதர்பா, தெலுங்கானா, ராயலசீமா மற்றும் தமிழகம் வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை (Trough) நிலவுகிறது.

இன்று முதல் 22-ந்தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்களின் கடலோர பகுதிகள் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம் மற்றும் புதுவையில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

23 மற்றும் 24-ந்தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள் மற்றும் தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம் மற்றும் புதுவையில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

இதனிடையே இன்று முதல் 22-ந்தேதி வரை உள் தமிழக மாவட்டங்களில், அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் 2-3° செல்சியஸ் இயல்பை விட அதிகமாக இருக்கக்கூடும். கடலோர தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை ஒட்டியே இருக்கக்கூடும்.

மேலும் இன்று முதல் 22-ந்தேதி வரை அதிக வெப்பநிலையும், அதிக ஈரப்பதமும் இருக்கும் நிலையில், கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் அசௌகரியம் ஏற்படலாம்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 36-37° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 28° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். அதிக வெப்பநிலையும், அதிக ஈரப்பதமும் இருக்கும் நிலையில், அசௌகரியம் ஏற்படலாம்.

நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 37-38° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 28° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். அதிக வெப்பநிலையும், அதிக ஈரப்பதமும் இருக்கும் நிலையில், அசௌகரியம் ஏற்படலாம்.




# பரபரக்கும் தேர்தல் களம்: எடப்பாடி தொகுதியில் தொலைக்காட்சி சின்னத்திற்கு விஜய் ஆதரவு



**சென்னை, ஏப்.20:** தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

என் நெஞ்சில் குடியிருக்கும் சேலம் மாவட்டம், எடப்பாடி சட்டமன்றத் தொகுதி மக்கள் அனைவருக்கும் வணக்கம். எடப்பாடி சட்டமன்ற தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் கூ.பிரேம்குமார் அவர்கள், முன்பே நமது ரசிகர் மன்றத்தில் நிர்வாகியாகப் பயணித்தவர்தான். நம்முடைய சகோதரர்தான்.

எனவே, தற்போதைய சட்டமன்ற தேர்தலில் வேட்பாளராக போட்டியிடும் நமது முன்னாள் நிர்வாகியான கூ.பிரேம்குமார் அவர்களையும் அவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொலைக்காட்சி பெட்டி சின்னத்தையும் நமது தமிழக வெற்றிக் கழகம் சார்பாக ஒருமனதாக ஆதரிக்க முடிவு செய்துள்ளோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது முழு ஆதரவுடன் களம் காணும் நம் சகோதரர் கூ.பிரேம்குமார் அவர்களை, மனத்தளவில் நம்முடைய வேட்பாளராகக் கருதி, அவருக்கு தேர்தல் ஆணையத்தால் அளிக்கப்பட்டுள்ள வரிசை எண் 12-இல் தொலைக்காட்சி பெட்டி சின்னத்தில் வாக்களிக்க வேண்டுகிறேன். நம் குடும்பத்தைச் சேர்ந்த அவரை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்யுமாறு கழக நிர்வாகிகளையும் தோழர்களையும் எடப்பாடி தொகுதி மக்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எடப்பாடி தொகுதியில் தமிழக வெற்றிக் கழகத்தின் சின்னத்தை முடக்கி, குறுக்கு வழியில் வெற்றியடைய முயன்றவர்களுக்குச் சரியான பாடத்தைப் புகட்டும் விதத்தில் இவரது வெற்றி அமையட்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "தமிழ்நாட்டில் கஞ்சா கரைபுரண்டு ஓடுகிறது.. மோடி பிரதமராக இருப்பது இந்தியாவுக்கு பெருமை"

## கோவை கூட்டத்தில் கர்ஜித்த இ.பி.எஸ்

**கோவை, ஏப்.20:** கோவையில் அதிமுக-பாஜகவின் என்டிஏ கூட்டணி பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் பிரதமர் மோடி, அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி, நயினார் நாகேந்திரன், எல். முருகன், அண்ணாமலை, வானதி சீனிவாசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கோவை, திருப்பூர், நீலகிரி மாவட்ட சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிடும் அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்கள் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் எடப்பாடி பழனிச்சாமி பேசியதாவது,

"இன்று இந்தியாவே கோவையைத் திரும்பிப் பார்த்துக்கொண்டு இருக்கிறது. இது, தமிழகத்தில் நடக்கும் தேர்தல். தமிழகத்தை சுரண்டிப் பிழைத்துக் கொண்டிருக்கும் குடும்பத்துக்கும், தமிழ்நாட்டுக்கும் நடக்கும் தேர்தல். குடும்ப ஆட்சி, வாரிசு அரசியலுக்கு முடிவு கட்டும் தேர்தல். ஊழல் நிறைந்த மக்கள் விரோத ஆட்சி அகற்ற வேண்டும் என்ற அடிப்படையில் தேசிய ஜனநாயகக் கூட்டணி அமைத்திருக்கிறது, அதிமுக தலைமை தாங்குகிறது, மக்கள் விரோத ஆட்சியை அகற்றுவீர்களா?

தீயசக்தி திமுக அழிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே புரட்சித்தலைவர் எம்ஜிஆர் அதிமுகவை தோற்றுவித்தார். அதன்பின் அம்மா சிறப்பான ஆட்சி கொடுத்தார்கள். பிரதமர் மோடி அவர்கள் உலகத் தலைவர்களால் பாராட்டும் அளவுக்கு இந்திய நாட்டின் பெருமையை உயர்த்திப் பிடித்தவர். நம் நாட்டை எத்தனையோ பிரதமர்கள் ஆண்டுள்ளனர், ஆனால் இந்தியா நாட்டிற்கு பிரதமர் மோடி வந்தபின்னரே பெருமை அதிகரித்துள்ளது.

இரவு, பகல் பாராமல் உழைக்கும் தலைவர் மோடி. அதிமுக, பாஜக ,பாமக, அமமுக மற்றும் பல கட்சிகள் இணைந்து அற்புதமான வெற்றிக் கூட்டணி அமைந்துள்ளது. திமுகவின் ஐந்தாண்டுகாலத்தில் 5 லட்சம் கோடி கடன் தான் சாதனை, கடன் வாங்குவதில் முதல் மாநிலம் தமிழ்நாடு. 73 ஆண்டுகால தமிழக ஆட்சி வரலாற்றில் எத்தனையோ அரசுகள் மாறி மாறி ஆட்சிக்கு வந்துள்ளன.

2021ம் ஆண்டு வரை ஒட்டுமொத்தமாக இருந்த கடன் 4 லட்சத்து 85 ஆயிரம் கோடி மட்டுமே, ஆனால் அதைவிட திமுகவின் இந்த ஐந்தாண்டுகளில் 5 லட்சம் கோடி கடன். தமிழ்நாடு வளர்ச்சிபெற எந்த் நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால் அதிமுக அரசு மத்திய அரசுடன் இணக்கமாக இருந்து தேவையான நிதியும் திட்டங்களும் பெற்றோம், முதன்மை மாநிலமாக இருந்தோம்.

பிரதமர் எங்களின் வேண்டுகோளை ஏற்று நடந்தாய் வாழி காவிரி திட்டத்துக்கு 11,600 கோடி ரூபாய் நிதி ஒதுக்கினார். ஆனால் திட்டத்தை முதல்வர் நிறைவேற்றவில்லை, மத்திய அரசு திட்டம் கொடுக்கவில்லை என்று அவதூறு பரப்புகிறார்.

பிரதமர் மோடி கொடுத்த திட்டத்தை ஏன் செயல்படுத்தவில்லை? இப்படிப்பட்ட ஆட்சி தேவையா? கோவை, திருப்பூர், நீலகிரி என 23 தொகுதிகளில், 2021 தேர்தலில் 17 இடங்களை வென்றோம். இன்றைக்கும் அதே கூட்டணி, 23 தொகுதிகளிலும் 100க்கு 100 வெற்றி பெறும். அதுவும் கோவை மாவட்டம் அதிமுகவின் கோட்டை. 2021ல் 10க்கு 10 வென்றோம். ஒரு இடம் கூட திமுகவுக்குக் கிடைக்கவில்லை, திமுக ஆட்சி செய்தாலும் கோவையில் ஆட்சி செய்தது அதிமுக.

அதிமுக ஆட்சியில் எந்த திட்டமும் நிறைவேற்றவில்லை என்று சொல்வதை ஸ்டாலின் நிறுத்திக்கொள்ள வேண்டும். அதிமுக ஆட்சி பொற்கால ஆட்சி. திமுக ஊழல் ஆட்சி செய்கிறது. எங்கு பார்த்தாலும் போதைப் பொருள் விற்பனை. தமிழ்நாட்டில் எங்கு பார்த்தாலும் மூலைமுடுக்கெல்லாம் கஞ்சா கரைபுரண்டு ஓடுகிறது.

சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுவிட்டது, சிறுமி முதல் பாட்டி வரை பெண்களுக்குப் பாதுகாப்பில்லை. இந்த தேர்தல் திமுகவை வீழ்த்தும் தேர்தல். அதிமுக ஆட்சி அமைந்த மூன்றே மாதத்தில் கஞ்சா ஒழிக்கப்படும். போதையில்லா மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்குவோம்.

மத்திய அரசிடம் இருந்து தேவையான நிதி, திட்டம் பெற்று தமிழ்நாட்டை நம்பர் ஒன் மாநிலமாக உருவாக்குவோம். நம் அதிமுக வேட்பாளர்களுக்கு இரட்டை இலை சின்னத்திலும், பாஜக வேட்பாளர்களுக்கு தாமரை சின்னத்திலும், பாமக வேட்பாளர்களுக்கு மாம்பழம் சின்னத்திலும், அமமுக வேட்பாளர்களுக்கு குக்கர் சின்னத்திலும் வாக்களிக்க வேண்டும். 210 இடங்களில் நம் கூட்டணி வெல்வதற்கு முழு ஆதரவு கொடுக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM